
1870—

# SPIRITUAL TEACHING.

SECOND EDITION—10,000.

# ஞானபோதம்.



MADRAS:

PRINTED FOR THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,
By H. W. Laurie, Christian Knowledge Society's Press,
No. 18, Church Street, Vepery,
1870

N. 124

# இலவசமாய்க் கொடுக்கக்கூடிய பிரிதிகள்.

---

கெட்டகுமாரனைக் குறித்த உவமை.
உத்தம சமாரியன்.
இயேசுக்கிறிஸ்து இரட்சண்ணிய பேழை.
சந்தோஷமுள்ள செய்திகள்.
இயேசுவுக்கும் நீதிக்கும் நடந்த சம்பாஷணை.
வெண்கல சர்ப்பம்.
சலாம்.
திவ்விய விளம்பரம்.
விக்கிரகவணக்கம் பிள்ளைவிளையாட்டு.
சற்குரு நிலை.
இரட்சண்ணிய உபதேசசாரம்.
பாவநிவிர்த்தி.
விக்கிரகபூசை பெரிய மூடத்தனம்.
விக்கிரகபூசை பயனற்றது.
நல்லுரை.

# SPIRITUAL TEACHING.

# ஞானபோதம்.

சகோதரரே! இந்தப் புஸ்தகத்தில் நாங்கள் சொல்லப்போகிற காரியங்களைத் தர்க்கமாடும்படி சொல்லுகிறோமென்று நீங்கள் நினைக்கவேண்டாம். உங்களைத் தூஷிக்கிறதற்குச் சொல்லுகிறோமென்றும் ஒருபோதும் எண்ணவேண்டாம். பொய்யை நீங்கள் பொய்யென்று கண்டு அதைத் தள்ளவும், மெய்யை நீங்கள் மெய்யென்று கண்டு அதிலே சேரவும், எங்களுக்கு ஆசை இருக்கிறதேயல்லாமல் தர்க்கமாட வேணுமென்கிற மனசும் இல்லை; நிந்திக்கிற அபிப்பிராயமும் இல்லை. உங்களோடே சகோதரர்களைப்போலப் பட்சங்கொண்டு பேசி உண்மையைத் தெரிவிக்க வேணுமென்றிருக்கிறோம். ஆகையினாலே நாங்கள் சொல்லுகிற காரியங்களை நீங்கள் மனம்நொந்து படிக்காதேயுங்கள். அன்போடே சொன்னோமென்று நம்பி அன்போடே வாசியுங்கள். இந்தச் சின்ன புஸ்தகத்தை முழுதும் படித்து, நன்றாய்ச் சிந்தித்து, இதில் சொல்லியிருக்கிறது நியாயமோ அநியாயமோ என்று கண்டறியுங்கள். சத்தியமென்கிற வெளிச்சம் உங்கள் மனசிலே பிரவேசித்துப் பிரகாசிக்கும்படி தேவன் கிருபைசெய்வாராக.

## முதலாம் அதிகாரம்.

### திரிமூர்த்திகளைக் குறித்துச் சொல்லியது.

சகோதரரே! மெய்யான தேவன் ஒருவர் இருக்கிறார். அவரேயல்லாமல், வேறு தேவர்கள் இல்லை. அந்த மெய்யான தேவனை அறிகிறது முக்கியமான காரியம். அவருடைய தயவை அடைகிறது பரம பாக்கியம்.

ஒரே தேவன்மாத்திரம் இருக்கிறாரென்கிற சத்தியத்தை நீங்கள் விட்டுவிட்டு, அநேக தேவர்கள் இருக்கிறார்களென்கிற அபத்தத்தை நம்பி, பலபல தேவர்களை நமஸ்காரம்பண்ணி வருகிறீர்கள். இது சரியல்லவே. ஒரே ஒரு தேவன் இருக்கிறபோது, அநேக தேவதைகள் இருக்கிறார்களென்று சொல்லுகிறது பொய்யல்லவா? உள்ள தேவனை விட்டு, இல்லாத தேவர்களைக் கும்பிடுகிறது துரோகம் அல்லவா? தேவர்களல்லாதவர்களை நம்புகிறது அளவில்

லாத மோசம் அல்லவா? நீங்கள் இதைக்குறித்து யோசனைபண்ணுங்கள். ஆண்டவர் உங்களுக்குப் புத்தியைக் கொடுத்திருக்கிறார். ஏன் அதை மயங்கவிட்டீர்கள்? பல தேவர்கள் உண்டென்கிற மயக்கத்தை நீக்கிப்போடுங்கள். மனம் தெளியுங்கள், மெய்யான கடவுள் ஒருவரே உண்டென்கிற நிச்சயத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். அந்த மெய்யானவர் ஆரென்று விசாரித்து, அறிந்து, இனிமேல் அவரைமாத்திரமே தொழுதுகொள்ளுங்கள்.

அந்த மெய்யானவர் ஆர்? நீங்கள் சொல்லுகிற பிரமதேவனா? அதைக் கொஞ்சம் சோதித்து அறியுங்கள். உங்கள் புராணங்களில் பிரமாவைக்குறித்துச் சொல்லியிருக்கிற சில காரியங்களை எடுத்துக் காண்பிக்கிறோம். நிதானித்துப்பாருங்கள்.

---

பிரமாவைக் குறித்துச் சொல்லியது.

---

கந்தப்புராணம், மார்க்கண்ட படலம்.

கூன்முகத்திங்கணெற்றிச்
கோதையர்குழுவுக்கெல்லாம்
தான்முதலிறைவியாகத்
தன்மையாற்சமைக்கத்தக்க

மான்முகனோக்கிமுன்னோர்
மலரயன்மையலாகி
நான்முகமானானென்ப
நாமுணராததன்றே. ௰௨.

எல்லா ஸ்திரீகளுக்கும் முதன்மையாயிருக்கும்படியாக, திலோத்தமை என்கிற ஒரு ஸ்திரீயைப் பிரமா உண்டாக்கினானென்றும்; உண்டாக்கினபின்பு தன்னுடைய மகளாகிய அந்தத் திலோத்தமையின்மேல் அந்தப் பிரமா மோகங்கொண்டானென்றும்; தன் தகப்பனுடைய கெட்ட இச்சைக்குத் தான் சம்மதிக்கக்கூடாதென்று அந்தத் திலோத்தமை நாலு திக்கிலும் ஓடி மறைந்தபோது அந்தப் பிரமா அவளைக் கண்டுபிடிக்கும்படி நாலு முகத்தைக் கொண்டானென்றும்; இந்தப் பாட்டிலே சொல்லியிருக்கிறது.

இன்னும் பாருங்கள்.

அருணாசலபுராணம், திருமலைச்சருக்கம்.

சீதராகேட்டியென்வரவின்செய்கையைக்
காதநூறாயிரங்கணத்திலேகடந்
தாதியான்முடியறிந்தணுகினேனென
ஓதினான்கைதையுமுள்ளதென்றதே. ௬௩.

பிரமா விஷ்ணுவை நோக்கி, தான் ஒரு நொடியிலே நூறாயிரக்காதம் பறந்து சிவனு

டைய சிரசைப் பார்த்தேனென்று சொன்ன தாகவும்; தாழம்பூவும் பிரமாவுக்குச் சாட்சி யாக, நிசந்தான் பிரமா பார்த்தானென்று சொ ன்னதாகவும்; இந்தப் பாட்டிலே கண்டிருக் கிறது.

அருணாசலபுராணம், திருமலைச்சருக்கம்.

ஆசையாலுருகுமவ்வரிதனன்புகண்
டீசனும்பலவரமினிதுநல்கினன்
வாசமாமலரவவுனக்குமண்ணின்மேல்
பூசையுங்கோயிலும்போகவென்றனன். ௬௮.

சிவனானவன், விஷ்ணு கேட்ட வரங்களை யெல்லாம் அவனுக்குக் கொடுத்தானென்றும்; பிரமா பொய்சொன்னபடியினாலே அவனுக் குப் பூமியில் பூசையும் கோயிலும் இல்லாமல் போகட்டுமென்று அந்தப் பிரமாவுக்குச் சா பம் இட்டானென்றும்; இந்தப் பாட்டு சொல் லுகிறது.

இதுவரைக்கும் சொல்லிவந்த பாடல்களினா லே பிரமாவைக்குறித்து இரண்டு காரியங்களை அறிந்துகொள்ளலாம்.

க—வது. பிரமா தான் பெற்ற தன் மகள்மே லே மோகங்கொண்டான்.

உ-வது. சிவனுடைய சிரசை வெகு கஷ்டத்தோடே தேடியும் அதைக் காணமல்போன பிரமா தான் அதைக் கண்டேனென்று பொய் சொன்னன். தான் பொய்சொன்னதுமல்லாமல், தாழம்பூவையும் தனக்காகப் பொய்சொல்லும்படி செய்தான்.

பிரமா செய்த இந்த அக்கிரமங்களைக்குறித்து என்னத்தைச் சொல்லுவோம்? தன்னுடைய சொந்த மகள்மேல் இச்சை வைத்தானே! அப்படிப்பட்ட அக்கிரமக்காரன் வேறே ஒருவனாவது உண்டா? துஷ்டமனுஷர்களுக்குள்ளேயும் ஒருவன் தன் மகளோடே விபசாரம் செய்கிறதற்குத் துணிவானு? பேசவும் பயங்கரமாயிருக்கிற • இந்தப் பாவத்தைச் செய்த பிரமாவைத் தேவனென்று நினைக்கிறதுங்கூடப் பாவமல்லவா? இப்படிப்பட்டவனைச் சிஷ்டிகர்த்தாவென்று சொல்லுகிறதெல்லாம் வெகு மோசமல்லவா?

இதுவுமல்லாமல், பிரமா பொய்சொன்னனே. ஒருவன் உங்களோடே பொய்சொன்னல், பின்பு நீங்கள் அவனை நம்புவீர்களா? நம்பமாட்டீர்களே. இப்படியிருக்க, பொய்பே

சின பிரமாவை நம்புகிறதெப்படி? தேவன் பொய்சொல்லுவாரா? ஒருபோதும் பொய் சொல்லமாட்டாரே. ஆகையால், பொய்சொன்ன பிரமாவைத் தேவனென்று சொல்லுகிறது எது?

மேலும் விபசாரக்கள்ளனும் பொய்யனுமாயிருக்கிறவனை யோக்கியனென்று சொல்லத் தகுமா? சொல்லத் தகாதே; ஆகையால், தன் மகளோடே விபசாரஞ்செய்யப் பிரயாசப்பட்டுப் பொய்யையும் பேசின பிரமாவை யோக்கியனென்று சொல்லலாகாது. அவனை யோக்கியனென்றே சொல்லுகிறதற்குக் கூடாமலிருக்க, அவனைத் தேவனென்று சொல்லுகிறது என்ன? புத்தியோ?

· பிரமாவின் காரியம் இப்படியிருக்கிறதினாலே அவனைத் தேவனல்ல என்கிறது நிச்சயமே.

பிரமாவைத் தேவனல்லவென்று தள்ளினாலும், நாங்கள் கும்பிடுகிற விஷ்ணு மெய்யான தேவனாயிருக்கிறானல்லவாவென்று சொல்லப் போவீர்கள். ஆனாலும், நீங்கள் ஆத்திரப்படாமல் அதையும் கொஞ்சம் விசாரித்துப்பாருங்கள்.

## விஷ்ணுவைக் குறித்துச் சொல்லியது.

விஷ்ணு இந்தப் பூலோகத்திலே கிருஷ்ணனாய் அவதாரமெடுத்தானென்று சொல்லுகிறீர்கள். அந்தக் கிருஷ்ணாவதாரத்தை நீங்கள் வெகு சிரேஷ்டமாய் எண்ணித் துதிக்கிறீர்கள். அவனைக்குறித்து உங்கள் புராணங்களில் சொல்லியிருக்கிற சில காரியங்களைக் கேளுங்கள்.

கிருஷ்ணன் கோபிகாஸ்திரீகளோடே அநேக லீலைகள் செய்தானென்று பாகவதத்தில் பத்தாம் ஸ்கந்தத்திலே விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறது. அதிலே கண்டிருக்கிற விவரங்கள் மகா அசங்கியமாயிருக்கிறதுகள்; மனுஷர்களுடைய மனசைக் கெடுக்கிறதற்கும், அவர்களுக்குள்ளே பொல்லாத இச்சைகளை உண்டாக்குகிறதற்கும், தகுதியாகவும் இருக்கிறதுகள். அந்த லச்சைகெட்ட நடத்தைகளை விஸ்தரித்துச் சொல்லுகிற பாட்டுகளை எடுத்துக் காண்பிக்கிறதற்கு எங்களுக்கு வெட்கமாயிருக்கிறபடியினாலே, அதுகளைச் சுருக்கமாகவும் குறிப்பாகவும் சொல்லுகிற ஒரே

ஒரு பாடலைமாத்திரம் இவ்விடத்திலே எழுதி வைத்தோம்.

## பாகவதம், பத்தாவது ஸ்கந்தம், கோவியரைப் புணர்ந்த அத்தியாயம்.

பொங்கிணர்க்காவுதோறும்
புதுமணற்குன்றந்தோறும்
பங்கயச்செங்கண்மாயன்
பானிலாப்பயன்கொண்டோங்கு
கங்கையந்திரைவாயுற்ற
களியிளவன்னம்போலும்
கொங்கவிழ்கோதைமாதர்
குழாத்தொடுமாடினனே. உஉ.

கங்காசலத்தின் அலைவாயில் பொருந்திய அன்னத்தைப்போல் இருக்கிற ஸ்திரீகள் கூட்டத்தோடே கிருஷ்ணன் சோலைகள்தோறும் மணற்குன்றுகள்தோறும் போய் விளையாடினனென்று இந்தப் பாட்டிலே சொல்லியிருக்கிறது.

இப்படி இடைச்சிகளைக் கெடுத்த கிருஷ்ணன் வேறே அநேக பாவங்களையும் செய்தானென்று பாகவதம் முதலான நூல்களிலே சொல்லியிருக்கிறது. கேளுங்கள்.

## பாகவதம், பத்தாவது ஸ்கந்தம், சகடமுதைத்த அத்தியாயம்.

கட்டமைந்தசிறுகன்றுவிடுக்கும்
தொட்டுவெண்ணெயொடுதோய்தயிருண்ணும்
நெட்டுறிக்குரலினின்றுகைந்நீட்டும்
எட்டுகின்றிலதுடைக்குமெறிந்தே. ௰௭.

அசோதையே கேள்; உன் மகனாகிய கிருஷ்ணன் கட்டுத்தறியில் கட்டியிருக்கிற சின்ன கன்றுகளை அவிழ்த்துவிடுகிறான்; வெண்ணெயும் தோய்ந்த தயிரும் எடுத்துப் புசிக்கிறான்; உயரக் கட்டியிருக்கிற உறியிலிருக்கிறதை எடுக்கிறதற்கு உரலின்மேல் ஏறி நின்றுகொண்டு கையை நீட்டுகிறான்; எட்டினதை விட்டு எட்டாத உறியின்மேல் கல்லையாவது தடியையாவது வீசி அந்த உறியில் உள்ள பாண்டங்களை உடைக்கிறானென்று இடைச்சிகள் அசோதையிடத்தில் முறையிட்டதாக இந்தப் பாட்டிலே சொல்லியிருக்கிறது.

## பாகவதம், பத்தாவது ஸ்கந்தம், மருதிடை தவிழ்ந்த அத்தியாயம்.

எறித்தவெண்டிங்களூறு
மின்றுளியமுதமென்னத்
தெறித்தவெண்டயிர்நுண்புள்ளி
திருமுகத்தொளிரநின்ற

உறைப்பசுங்கொண்டலன்று
னுடைத்தனன்றடவுத்தாழி
மறைத்தனள்வைத்தவெண்ணெய்
வாரினனோடினனே. ௫.

அசோதை தயிர் கடையும்போது தெறித்த சின்ன தயிர்ப்புள்ளிகள் முகத்தில் விளங்கும் படி இருந்த கிருஷ்ணன் தாய் இல்லாதபோது பெரிய தயிர்ப்பானையை உடைத்து, அவள் மறைத்துவைத்த வெண்ணெயை வாரிக்கொண்டு ஓடிப்போனானென்று இந்தப் பாட்டிலே சொல்லியிருக்கிறது.

எட்டாம் பாட்டில் அசோதை கிருஷ்ணனைப் பிடித்துக்கொண்டுவந்து உரலோடே கட்டினாளென்று சொல்லியிருக்கிறது.

## பாகவதம், பத்தாவது ஸ்கந்தம், மதுரைகண்ட அத்தியாயம்.

மழைமதம்பொழிமதகளிறனையவம்மாயன்
கிழலும்வெண்மதிநெற்றிதோய்மாடநீண்மறுகில்
அழலும்வேற்படைக்கஞ்சனைதந்துகின்மாசு
கழுவுவான்றனைக்கண்டனன்கலைதருகென்றான். ௰௭.

பொன்னந்துசணிபுரவலன்புகன்றமைகேட்டு
மன்னுகானினுமலையினும்வாழ்பவருடுப்ப
தின்னபூந்துகிலன்றுகொலென்னலுமவன்றன்
சென்னிசிந்தினன்செம்முகத்திகிரியஞ்செல்வன். ௰௮.

கையினாலவன்கருந்தலைதுணித்தபின்கமழும்
செப்பதாமரைகருமுகில்பூத்தெனத்திகழ்வோன்
ஐயபூந்துகிலொன்றிலாதவ்வழியனைத்தும்
வெய்யதோழருக்குதவினன்விடையெனநடந்தான். ௰௬.

கிருஷ்ணன் வீதியிலே போகும்போது கஞ்சனுடைய வஸ்திரங்களைச் சலவைசெய்கிற வண்ணானைக் கண்டு வஸ்திரங்கள் கொடென்று அவனைக் கேட்டானென்றும்; கிருஷ்ணன் சொன்னதை அந்த வண்ணான் கேட்டுக் கிருஷ்ணனை நோக்கி, காட்டிலும் மலையிலும் வாழத்தக்கவர்கள் உடுத்துக்கொள்ளுகிறது இந்த அழகான வஸ்திரமல்லவென்று சொல்லவே, கிருஷ்ணன் அதைக் கேட்டு அந்த வண்ணானைத் தலை சிதறி விழும்படி கொன்றானென்றும்; கிருஷ்ணன் அந்த வண்ணானுடைய தலையைக் கிள்ளி எறிந்து அவனைக் கொன்றபின்பு ராச வஸ்திரங்களில் ஒன்றுவிடாமல் எடுத்து எல்லாவற்றையும் அவ்விடத்தில் வந்திருக்கிற தன்னுடைய சிநேகிதருக்குக் கொடுத்துவிட்டு ரிஷபத்தைப்போல நடந்தானென்றும்; மேல்வந்த மூன்று பாடல்களிலே சொல்லியிருக்கிறது.

இதுவரைக்கும் சொன்ன பாடல்களினாலே விஷ்ணுவைக்குறித்து மூன்று காரியங்களை அறிந்துகொள்ளலாம்.

௧-வது. கிருஷ்ணன் அநேக இடைச்சிகளைக் கெடுத்தான்.

௨-வது. கிருஷ்ணன் வெண்ணெயும் தயிரும் திருடினான்.

௩-வது. கிருஷ்ணன் கஞ்சனுடைய வண்ணானைக் கொன்று அந்த வண்ணானிடத்தில் இருந்த வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டு தன்னுடைய சிநேகிதருக்குக் கொடுத்துவிட்டான்.

ஐயையோ இப்பேர்ப்பட்ட மகா பாதகங்களைச் செய்தவனைத் தேவனென்று சொல்லுகிறதற்கு உங்களுக்குப் பயம் இல்லையோ?

உங்கள் ஊரிலே ஒருவன் வந்து உங்கள் பெண்சாதிகளையும் குமாரத்திகளையும் கெடுத்தால், அவனை மகா பொல்லாதவனென்று சொல்லுவீர்களல்லவா? இடைச்சிகள் முதலான ஸ்திரீகளைக் கெடுத்த கிருஷ்ணனை எந்தவித மாய்த் தேவனென்று சொல்லலாம்?

உங்கள் வீடுகளிலே நித்தமும் ஒருவன் புகுந்து உங்கள் வீட்டுப்பதார்த்தங்களைத் திருடிக்கொண்டுபோனால், அவனைத் திருடனென்று சொல்லுவீர்களல்லவா? இடையர் வீடுகளில் வெண்ணெய் தயிர் மோர் முதலானதுக

ளைத் திருடின கிருஷ்ணனை எப்படித் தேவ னென்று சொல்லலாம்?

உங்கள் ஊரிலே ஒருவன் வந்து, மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு தெருவிலே நடந்து போகிற ஒரு வண்ணானைக் கொன்றுபோட்டு அவனிடத்தில் இருக்கிற துணிகளைப் பிடுங் கிக்கொண்டுபோனால், அவனைக் கொலைபாதக னென்று சொல்லுவீர்களல்லவா? அப்படிப்ப ஒரு வண்ணானைக் கொன்ற கிருஷ்ணனை எந் தப்பிரகாரமாய்த் தேவனென்று சொல்லலாம்?

விஷ்ணு அந்தக் கெட்ட காரியங்களை அவ தாரத்திலே செய்தானென்று நீங்கள் ஒரு போ க்குச் சொல்லுகிறதுண்டு. ஆனாலும், அப்படிச் சொல்லுகிறது ஒரு வீண்போக்குச்சாக்கேயல் லாமல் வேறல்ல. தேவனிடத்தில் எந்தக்கா லத்திலும் பாவம் எவ்வளவும் இருக்கிறதில்லை. அவர் எல்லாக் காலங்களிலும் பரிசுத்தமாகவே இருக்கிறார். ஆகையினாலே அவர் அவதார மெடுத்தால் அந்த அவதாரத்திலும் எவ்வள வும் பாவமில்லாமல் பரிசுத்தமாய்த்தான் நடப் பாரேயல்லாமல், பாவநடத்தையாய் நடக்க மாட்டாரே. எப்போதும் பரிசுத்தமாயிருக் கிற தேவன் அவதாரமெடுத்தபோது விபசாரக்

கள்ளனாய்த் திரிந்து பெண்டுகளைக் கெடுப்பாரா? எப்போதும் நீதியையும் நியாயத்தையும் காப்பாற்றுகிற தேவன் அவதாரமெடுத்த போது வெண்ணெய் திருடுவாரா? தேவன் அவதாரமெடுத்தால், மனுஷர்களுக்குத் துன்மார்க்கங்களைச் செய்யவேண்டாமென்றும், சன்மார்க்கமாய் நடக்கவேணுமென்றும் போதிப்பாரல்லவா? தாமே பரிசுத்தமாய் நடந்து தம்முடைய நல்ல நடத்தையினாலே சன்மார்க்கம் இன்னதென்று உலகத்துக்கு விளங்கச் செய்வாரல்லவா? இப்படியிருக்க, விஷ்ணு செய்த திருட்டு முதலான துன்மார்க்கங்களை அவதாரத்திலே செய்தானென்று நீங்கள் போக்காகச் சொல்லுகிறதெல்லாம் வீணான வார்த்தையாயிருக்கிறது. அப்படிப்பட்ட துன்மார்க்கங்களைச் செய்தவனைத் துன்மார்க்கனென்றே தீர்க்கவேண்டும். ஆகையால் அந்த விஷ்ணு தேவனல்ல. அந்த அவதாரமும், பொய்யேயல்லாமல், அது தேவ அவதாரமல்ல. விஷ்ணு செய்ததாக நீங்கள் சொல்லுகிற, மீன் ஆமை பன்றி முதலான மற்ற அவதாரங்களையும் நீங்கள் யோசித்துப் பார்ப்பீர்களேயானால், அதுகளும் அபத்தமாகவே இருக்கிறதென்று உங்களுக்கு நன்றாய்த் தெரியவரும்.

மேலும், அவதாரமெடுத்தபோது பாவஞ் செய்கிறவன் அவதாரமில்லாதபோதும் பாவஞ் செய்வான். அதற்குச் சந்தேகமில்லை. அப்படியே உங்கள் புராணங்கள் விஷ்ணு அவதாரகாலத்திலே செய்த அக்கிரமங்களைச் சொல்லுகிறதுமல்லாமல், அந்த விஷ்ணு யதாரூபமாயிருக்கும்போது செய்த அக்கிரமங்களையும் சொல்லிக்கொண்டுவருகிறது. சிவன் வைகுந்தத்துக்குப் போய் விஷ்ணுவைக் கண்டதாகவும்; அப்போது சிவன் கேட்டுக்கொள்ளவே, விஷ்ணு பெண்ரூபங்கொண்டு சிவனுக்கு எதிரே வந்து நின்றதாகவும்; அந்த விஷ்ணு சிவன் இருவரும் மகா துன்மார்க்கமாய் நடந்ததாகவும்; பாகவதத்திலே விரிவாகச் சொல்லியிருக்கிறது. அந்தக் கதை மெத்தவும் அசுத்தமாயிருக்கிறபடியினாலே, அதை விவரித்துச் சொல்லுகிற பாட்டுகளை நாங்கள் இவ்விடத்திலே எடுத்துக் காட்டவில்லை. அவதாரமில்லாதபோது விஷ்ணு இப்படிப்பட்ட கொடிய பாவத்தைச் செய்தான். இந்தப் பெரிய அக்கிரமத்தைச் செய்தவனை எந்தவிதத்திலே தேவனென்று சொல்லப்போவீர்கள்?

விஷ்ணு தனக்கு அவதாரமுள்ள சமயங்களிலும் அவதாரமில்லாத சமயங்களிலும் செய்த இன்னும் அநேக துன்மார்க்கங்கள் உங்கள் நூல்களில் சொல்லியிருக்கிறது. இந்தமட்டுக்கும் எடுத்துக் காண்பித்தது போதும். இன்னும் விஸ்தரித்துச் சொல்லுகிறதற்கு மனசில்லை.

விஷ்ணுவின் காரியம் இப்படியிருக்கிறதினாலே, அவனைத் தேவனல்ல என்கிறது யதார்த்தமே.

பிரமாவும் விஷ்ணுவும் தேவர்களல்லவென்று தள்ளுண்டுபோனாலும், நாங்கள் பூசிக்கிற சிவன் மெய்யான தேவனாயிருக்கமாட்டானோவென்று சொல்லுவீர்கள். ஆனாலும், அதையும் நீங்கள் சோதித்துப் பார்க்கவேணும். கேளுங்கள்.

---

## சிவனைக் குறித்துச் சொல்லியது.

---

### கந்தப்புராணம், கயமுகனுற்பத்திபடலம்.

நிருத்தனவ்விடைதனிநேமியான்றனை
இருத்தியென்றருள்புரிந்திடத்தின்மேவிய
ஒருத்தியைநோக்கியொன்றுரைப்பக்கேளென
அருத்திசெய்யாடலொன்றருளிற்கூறுவான். ௱௬௰.

சூதினையெம்மொடேபொருதுதோற்றனை
ஆதியேனீபுனையணிகள்யாவையும்
இதியால்வென்றனையென்னிலெம்மொரு
பாதியாஞ்சசிமுதற்பலவுங்கோடியால். ௱௬௧.

கவற்றினைமுன்னரேயுய்ப்பக்கண்ணுதல்
அவற்றினைப்பின்னுறவவளுமுய்த்தனள்
தவத்தியல்பல்லதோர்வல்லைச்சாதியால்
எவற்றினுமேலையோரினிதினாடினார். ௱௬௬.

ஏற்றானவனெய்தியவின்னருள்யாவதேயோ
தேற்றாமஃதியார்க்குமளப்பருஞ்செய்கையாலே
மேற்றானெதிராவுடனாடியமெல்லியற்குத்
தோற்றானெடுமாலயனாடவுந்தோற்றிலாதான். ௱௬௯.

ஒன்றாயபரஞ்சுடரோனுமைதன்னைநோக்கி
நன்றாயதுநின்வலியென்றுநகைத்துநம்மை
வென்றாயலைதோற்றனைமுன்னர்விளம்பன்மாற்றாய்
நின்றாரொடுபூணுமெமக்கினிநேர்தியென்றான். ௱௭௰.

சொல்லும்மளவிற்சுடர்நேமியன்சூதடைப்போர்
வெல்லுந்தகையோன்பரனென்றுவிளம்பலோடும்
நல்லுண்மைசொற்றாய்திறனன்றிதுநன்றிதென்னாச்
செல்லுண்டலைவம்பாலுமையாற்றச்சினம்புரிந்தாள். ௱௭௨.

சிவனானவன் விஷ்ணுவை அவ்விடத்தில் உளுக்காரச் சொல்லி, பார்வதியைப் பார்த்து நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேளென்று ஒரு விளையாட்டைச் சொன்னானென்றும்:

ஓ பார்வதியே! என்னோடே சொக்கட்டானாட்டத்தைச் சம்மதித்து ஆடவேணும்; நீ தோற்றுப்போனால் நீ தரித்துக்கொண்டிருக்கிற

ஆபரணங்களையெல்லாம் எனக்குக் கொடுத்துவிடு; நீ செயித்தால் என்னுடைய பல பொருளையும் நீயே எடுத்துக்கொள் என்று சிவன் சொன்னானென்றும்:

பின்பு சிவன் முன்னதாய்த்தான் பாச்சிக்கை எடுத்து உருட்டினான்; பார்வதி பின்னே பாச்சிக்கையை உருட்டினாள்; இப்படி ஆகாத நடத்தையாயிருக்கிற சொக்கட்டானாட்டத்தைச் சிவனும் பார்வதியும் சந்தோஷமாய் ஆடினார்களென்றும்:

இவ்விதமாய் ஆடும்போது, விஷ்ணுவும் பிரமாவும் எதிரிலிருந்து ஆடினாலும் தோற்றுப் போகாமல் ஆடிச் செயிக்கத்தக்க சிவனானவன் தன்னோடே எதிர்த்து மேலிட்டு ஆடின பார்வதிக்குத் தோற்றுப்போனானென்றும்:

அப்போது சிவன் பார்வதியைப் பார்த்து, நன்றாயிருக்கிறது உன்னுடைய நிர்வாகமென்று சொல்லி நகைத்து, என்னை நீ செயிக்கவில்லை, எனக்கு நீ தோற்றுப்போனாய் ஆகையினாலே முன்னே சொன்னபடி உன்னுடைய மாலையையும் பூஷணங்களையும் எனக்குக் கொடுத்துவிடென்று சொன்னானென்றும்:

சாட்சியாக உளுக்காந்திருந்த விஷ்ணுவைப் பார்வதி பார்த்து, யார் தோற்றது யார் செயித்ததென்று கேட்கும்போது, செயித்தவன் சிவன்தான் என்று விஷ்ணு சொன்னான். அப்படிச் சொன்னதைப் பார்வதி கேட்டு அந்த விஷ்ணுவை நோக்கி, நல்ல மெய்யைப் பேசினாய் உன்னுடைய செய்கை நன்றாயிருக்கிறது நன்றாயிருக்கிறதென்று சொல்லி மிகவும் கோபங்கொண்டாளென்றும்:

இந்தப் பாடல்களில் சொல்லியிருக்கிறது.

கந்தப்புராணம், உத்தரபடலம்.

அங்கையிலோடொன்றேந்தி
  யையமேற்றிடுவான்போலச்
சங்கரன்போந்துமற்றித்
  தாருகாவனத்தில்வைகும்
மங்கையர்கற்புச்சிந்தும்
  வசையுனைக்கொழிவுமுண்டோ
செங்கதிர்மதியஞ்செல்லுந்
  திசையெலாம்பரவுமன்றே. கூ௫.

உள்ளங்கையிலே ஒரு ஓட்டை ஏந்திக்கொண்டு பிச்சையெடுக்கிறவனைப்போலச் சிவன் வந்து இந்தத் தாருகாவனத்தில் இருக்கிற ஸ்திரீகளுடைய பத்தினித்தனத்தை அழித்த அபகீர்த்தி எப்போதானாலும் இல்லாமல்போமோ?

சூரியனும் சந்திரனும் பிரகாசிக்கப்பட்ட திக்குகளெல்லாம் அந்த அபகீர்த்தி பரம்புமல்லவா என்று இந்தப் பாட்டிலே சொல்லியிருக்கிறது.

## பாகவதம், பத்தாவது ஸ்கந்தம், விருகாசூரனைக் கொன்ற அத்தியாயம்.

துப்பிளெடுமுத்தலைசுருட்டுகடல்சுற்றும்
இப்புவியில்வானிலெவர்சென்னிமிசையேனும்
முப்புரமுருக்குமுகிழ்மூரலிறையோன்கை
வைப்பினவர்சாவுறவரந்தருதியென்றான். எ.

அன்னதுகளிற்றுரிவையந்தணனளித்தேம்
என்னவதுபார்த்திடவிளம்பிறைபுனைந்தோன்
சென்னிமிசையேதனதுசெய்யகரம்வைப்பான்
உன்னியெழமுக்கணிறையோடினன்விரைந்தே. அ.

அளித்திடும்வரத்தினையளித்திடநறுந்தேன்
துளித்திடுகெடுக்கையொடுதூசிலவெறிக்கும்
இளைத்தமதிசூடுமிறையெவ்வுலகுமோடிக்
களிற்றரசுகூறவருகண்ணனுலகுற்றான். கூ.

பஸ்மாசூரன் சிவனைப் பார்த்து, இறைவனே! இந்தப் பூமியிலும் தெய்வலோகத்திலும் இருக்கிறவர்களில் யாருடைய தலைமேலானாலும் நான் கையை வைத்தால் அவர்கள் சாகும்படி வரம் கொடுக்கவேணுமென்று கேட்டானென்றும்;

அப்போது சிவன் அந்த அசுரனைப் பார்த்து, அப்பா அந்த வரம் உனக்குக் கொடுத்தோமென்று சொன்னான். அதைக் கேட்டு அந்த அசுரன் தனக்குச் சிவன் கொடுத்த வரத்தைச் சோதித்து அறியும்பொருட்டுச் சிவனுடைய தலையின்மேல் தன் சிவந்த கையை வைக்கும்படி நினைத்து எழுந்தான். அப்படி எழுந்திருக்கவே, சிவன் சீக்கிரமாக ஓடினானென்றும்;

தான் பஸ்மாசூரனுக்குக் கொடுத்த வரத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்படிக்குச் சிவன் எந்த எந்த உலகத்துக்கும் ஓடிப் பின்பு விஷ்ணுவினுடைய உலகத்துக்குப் போனானென்றும்;

இந்தப் பாடல்களில் சொல்லியிருக்கிறது.

இந்தக் கதை சிவபுராணமாயிருக்கிற கந்தப் புராணத்திலேயும் சொல்லியிருக்கிறது. பஸ்மாசூரன் தன்னை எரிக்கவந்தபோது சிவன் பயப்பட்டு மனமயங்கி ஓடினதுமல்லாமல், ஐவேலியின் காய்க்குள்ளே புகுந்து ஒளித்துக்கொண்டதாகவும், அந்தக் கந்தப்புராணத்திலே சொல்லியிருக்கிறது.

இதுவரைக்கும் சொன்ன பாடல்களினாலே சிவனைக் குறித்து மூன்று காரியங்களை அறிந்து கொள்ளலாம்.

க-வது. சிவன் பார்வதியோடே சொக்கட்டானடி அவளுக்குத் தோற்றுப்போனாலும், நான் தோற்றுப்போகவில்லை நீதான் எனக்குத் தோற்றுப்போனாயென்று அச்சமும் கூச்சமுமில்லாமல் பொய்சொன்னான். சிவனுக்குச் சகாயமாக விஷ்ணுவும் பொய்சொன்னான்.

உ-வது. சிவன் பிச்சாண்டிவேஷங்கொண்டு தாருகாவனத்தில் போய் இருஷிகளுடைய பெண்சாதிகளைக் கெடுத்தான்.

ங-வது. பஸ்மாசூரன் கேட்ட வரத்தை அவனுக்குக் கொடுத்தால், தன்னை எரித்துப்போடும்படி வருவானென்று சிவன் தெரிந்துகொள்ளாமல், அந்தப் பஸ்மாசூரனுக்கு வரங்கொடுத்துவிட்டு, பின்பு அவன் தன்னைச் சாம்பலாக்கும்படி வந்தபோது கொடுத்த அந்த வரத்தை நீக்கக்கூடாமல் அவனுக்குப் பயந்து ஓடி ஒளித்துக்கொண்டான்.

பலவிதமான பாவங்களைச் செய்த இந்தச் சிவனைத் தேவனென்று சொல்லுகிறது தேவதூஷணம் அல்லவோ?

சிவன் பார்வதியோடே பொய் சொன்ன னே. புளுகின பாதகன் தேவனுவானே? சகோதரரே! பொய்பேசின அந்தச் சிவனை இனிமேல் தேவனென்று சொல்லாதேயுங்கள்.

சிவன் வெட்கங்கெட்டு வஸ்திரமில்லாமல் தாருகாவனத்துக்குப் போய் இருஷிகளுடைய பெண்சாதிகளைக் கெடுத்தானே. சகோதரரே! இப்படிப்பட்ட அக்கிரமத்தைச் செய்த சிவனை இனிமேல் தேவனென்று சொல்லாதேயுங்கள்.

சிவன் புத்தியில்லாமல் வரங்கொடுத்துவிட்டு, பின்பு பலமில்லாமல் ஓடி ஐவேலியின் காய்க்குள்ளே ஒளித்தானே. சகோதரரே! இப்படிப்பட்டவனை இனிமேல் தேவனென்று சொல்லாதேயுங்கள்.

சிவனுடைய காரியம் இப்படியிருக்கிறதினுலே, அவனைத் தேவனல்ல என்கிறது கிரமமே.

ஓ சகோதரரே! உங்கள் தேவர்களை நாங்கள் தூஷிக்கிறுேமென்று நீங்கள் சொல்லவேண்டாம். பிரமா, விஷ்ணு சிவன் என்கிறவர்களைக்குறித்து யாதொரு கதையும் நாங்களே புதிசாய் உண்டுபண்ணிச் சொன்னுேமா? இல்லையே. பாகவதம், கந்தப்புராணம் முதலான உங்கள் புராணங்களிலும் மற்ற நூல்களிலும்

அந்தத் திரிமூர்த்திகளைக் குறித்துச் சொல்லியிருக்கிறதை எடுத்துக் காண்பித்தோமேயல்லாமல் வேறல்ல. நாங்கள் எடுத்துக் காண்பித்தது உங்களுக்கு வெறுப்பாயிருந்தால், எங்கள் மேலே பழிபோடவேண்டாம்; உங்கள் புராணங்கள்மேலேயே பழிபோடுங்கள்.

திரிமூர்த்திகளைக்குறித்து உங்கள் புராணங்களிலும் மற்ற நூல்களிலும் சொல்லியிருக்கிறதைப் பார்த்தால், அந்தப் பிரமா விஷ்ணு சிவன் என்கிறவர்களில் எவனும் மெய்யான தேவனல்ல என்று தெளிவாய்த் தெரிகிறது. அப்படிப்பட்டவர்கள் தேவர்களாயிருக்கிறார்களென்றும் அவர்களைக் கும்பிடவேணுமென்றும் அந்தப் புராணங்கள் முதலான நூல்கள் சொல்லுகிறபடியினாலே அந்த நூல்களைப் பொய்யென்று தீர்க்கவேண்டுமேயல்லாமல் அதுகளை எவ்வளவும் நம்பக்கூடாது. அந்தப் புராணங்கள் முதலான நூல்கள் மெய்யான நூல்களாயிருந்தால், அநேக தேவர்கள் இருக்கிறார்களென்றும் அந்தத் தேவர்கள் பொய் திருட்டு விபசாரம் முதலான பாவங்களைச் செய்தார்களென்றும் அதுகளிலே சொல்லியிருக்குமா? மெய்யான நூலிலே அப்படி ஒருபோதும்

சொல்லியிருக்கவேமாட்டாது. நீங்கள் இதைக் குறித்து இனிமேல் சந்தேகப்படவேண்டாம். நீங்கள் நம்பிக்கொண்டிருக்கிற பாரதம், ராமாயணம் பாகவதம் கந்தப்புராணம் முதலானதுகள் மனுஷர்கள் தங்கள் மனசு போனபடியே கட்டின பொய்யான கட்டுக்கதைகள்தான். உங்களுக்குள்ளேயும் அப்படிச் சொல்லியிருக்கிறதுண்டு.

சங்கராசாரியர்.

உலகிலேபிறந்துமுன்னே ரோதியகலைகளெல்லாம்
நிலையதாஞ்சோதிதன்னை நிசமதாய்ச்சொன்னதில்லை
பலபலபேதமாகப் பங்கமாய்க்கூறுசெய்தே
அலகைபோற்பொய்யைப்பேசியருநரகமூழ்கிப்போனார்.

ஓ சகோதரரே! நன்றாய் அறியுங்கள். பிரமா விஷ்ணு சிவன் என்கிற திரிமூர்த்திகள் இருக்கிறார்களென்று சொல்லுகிறதெல்லாம் பொய்யான பேச்சேயல்லாமல், அப்படிப்பட்டவர்கள் இல்லவே இல்லை; அந்தப் பிரமா விஷ்ணு சிவன் என்கிறவர்களும் இல்லை; அவர்கள் செய்தார்களென்று சொல்லியிருக்கிற காரியங்களும் நடக்கவேயில்லை.

அந்தத் திரிமூர்த்திகளே பொய்யாயிருக்க; பின்னும் அவர்களாலே பிறந்தார்களென்று நீங்கள் சொல்லுகிற பிள்ளையார், சுப்பிரமணியன்,

தர்மராசா, காளி, காட்டேரி, துர்க்கை, ஏழண்ணன்மார், அங்காளம்மை, இரிசி, மாரியம்மை, வைரவன், ஐயனர், மன்னுதசுவாமி, கருமுனி, செம்முனி, வீரபத்திரன், பெரியதம்பிரான், முதலானவர்களெல்லாம் பொய்யென்று நாங்கள் சொல்லவும் வேண்டியதில்லை.

ஓ சகோதரரே! நல்ல வார்த்தையைக் கேளுங்கள். நீங்கள் அனுசரித்துவருகிற உங்கள் புராணங்கள் சாஸ்திரங்கள் முதலான நூல்களில் எதையாவது நீங்கள் நம்பி அதிலே சொல்லியிருக்கிறபிரகாரமாய் நடக்கிறதினுலே மோட்சஞ்சேரலாமென்று நினைத்தால், மண்குதிரையை நம்பி ஆற்றிலே இறங்கி, கரையேறலாமென்று நினைக்கிறதுபோல் இருக்குமே. ஆகையால், நீங்கள் நம்பியிருக்கிற பொய்த்தேவர்களையும் அபத்தமான வேதங்களையும் பொய்யான சாஸ்திரங்களையும் கட்டுக்கதைகளான புராணங்களையும் தள்ளிப்போடுங்கள். தேவன் ஒருவரே. அவர் உலகத்துக்குக் கொடுத்த மெய்யான வேதமும் ஒன்றே. அந்த மெய்யான தேவனையும் அவரால் உண்டான சத்தியவேதத்தையும் நீங்கள் அறியவேண்டியதே.

முதலாம் அதிகாரம் முற்றிற்று.

## இரண்டாம் அதிகாரம்.

### விக்கிரகங்களைக் குறித்துச் சொல்லியது.

சகோதரரே! நீங்கள் விக்கிரகங்களை வைத்து வணங்குகிறீர்கள். அது மிகவும் விருதாவான வேலை, கல்லை வைத்துப் பூசைசெய்தால், அந்தக் கல் தேவனாகுமோ? ஆகமாட்டாதே. நீங்கள் என்னசெய்தாலும், அது எப்போதும் கல்லாய்த்தான் இருக்குமேயொழிய, தேவனாகப்போகிறதில்லை. பிராண பிரதிஷ்டையென்று சொல்லிப் பிராமணர் எத்தனை மந்திரஞ்சொன்னாலும், அதற்குப் பிராணன் வருமா? நீங்கள் அதுக்குப் பண்ணியிருக்கிற வாய் பேசுமா? அதற்குக் காது கேட்குமா? அதின் கண் பார்க்குமா? அதின் மூக்கு முகருமா? அது தலை ஆட்டுமா? அதற்குக் கை வருமா? கால் உதவுமா? ஏதாவது ஒரு காரியத்தை அது அறியுமா? ஏதாவது ஒன்று செய்யுமா? எதுவும் இல்லையே. தேர் இழுக்கிற நாளிலேயானாலும் வெகு சனம் வந்திருக்கிறதென்று சொல்லி அந்த விக்கிரகம் தன்னுடைய சாமர்த்தியத்தைக் கொஞ்சம் காண்பித்து, தானே

வந்து அந்தத் தேரின்மேல் ஏறிக் குந்துமா? இல்லையே. அப்போதுகூட நாலுபேர் அதைத் தூக்கித் தேரின்மேல் மெள்ளமெள்ள படிப் படியாய் ஏறி வைக்கிறார்கள். மேலும், தேரின்மேல் ஏற்றினபின்பும் அது விழாதபடி தானாய் உளுக்காருமா? அதுவும் இல்லையே. வைத்த இடத்தில் பத்திரமாயிருக்கும்படி அதை நூற்கயிறுகளினாலே கட்டுகிறார்களல்லவா?

## தஞ்சாவூர்க் கவிராயர் பாடினது.

வாயிருந்தும்பேசாத விக்கிரகங்கள்
மனுடர்கைக்கிரியையான விக்கிரகங்கள்
தீயதொழிலாளிகளின் விக்கிரகங்கள்
சிலையுமரமுமான விக்கிரகங்கள்.

கண்ணிருந்துங்காணாத விக்கிரகங்கள்
காதிருந்துங்கேளாத விக்கிரகங்கள்
பெண்ணுருவாணுருவான விக்கிரகங்கள்
பேச்சதுமூச்சதுமற்ற விக்கிரகங்கள்.

கால்களிருந்துநடவா விக்கிரகங்கள்
கைகளிருந்துந்தடவா விக்கிரகங்கள்
வால்களுமருப்புமுள்ள விக்கிரகங்கள்
மாடுங்குரங்குமான விக்கிரகங்கள்.

தொண்டையிற்சத்தமில்லாத விக்கிரகங்கள்
தூஷணநாமங்களுள்ள விக்கிரகங்கள்
பறவைகளூர்வனவாம் விக்கிரகங்கள்
பேயும்பிசாசுமான விக்கிரகங்கள்.

## சிவவாக்கியர்.

நட்டகல்லைத்தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே
சுற்றிநின்றுமிணுமிணென்று சொல்லுமந்திரமேதடா
நட்டகல்லுபேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டிசட்டுவங்கறிச்சுவையறியுமோ.

ஓசைபெற்றகல்லைநீருடைத்துருக்கள் செய்கிறீர்
வாசலிற்புதைத்தகல் மழுங்கவேமிதிக்கிறீர்
பூசைபெற்றகல்லிலே பூவுநீறுஞ்சாத்துறீர்
இசனுக்குகந்தகல்லிரண்டுகல்லுமல்லவே.

சுட்டுவைத்ததேவருஞ்சுடாதுவைத்ததேவரும்
நட்டுவைத்ததேவருநடாதுவைத்ததேவரும்
கட்டிவைத்ததேவருங்கட்டவிழ்க்கவல்லரோ
இட்டுவைத்திடத்திலேகிடப்பதன்றியென்செய்வார்.

உங்கள் பெண்பிள்ளைகள் கல்லின்மேலே யல்லவா மிளகாய் அரைக்கிறார்கள்? ஐயையோ! இதென்ன புத்திக்கேடு! ஒரு கல்லைப் பாதி உடைத்து மிளகாய் அரைக்கிறதும் பாதி வைத்துச் சுவாமியென்று கும்பிடுகிறதும் நியாயமா?

சிநேகிதர்களே! கல்லும் கட்டையும் கும்பிடுகிறதினாலே உங்களுக்கு என்ன பிரயோசனம்? நீங்கள் ஒரு பொம்மையைத் தரிசித்தால், அது உங்களைக் கண்டறிகிறதில்லையே. நீங்கள் அதற்குப் பிரார்த்தனை பண்ணினால், அது உங்கள் பிரார்த்தனைகளைக் கேட்டறிகிற

தில்லையே. நீங்கள் அதைப் புகழ்ச்சிசெய்தால், அது உங்கள்மேல் பட்சங்கொள்ளமாட்டாதே. அதை நீங்கள் பூசித்தால், அது உங்களுக்கு நன்மைசெய்யமாட்டாதே. அதற்குப் பட்சமும் இல்லை கோபமும் இல்லை. அதற்குப் புத்தியும் இல்லை சத்தியும் இல்லை. அதற்குப் பேச்சும் இல்லை மூச்சும் இல்லை. அது உங்களுக்கு நன்மையும் செய்யமாட்டாது, உங்களுக்குத் தீமையும் செய்யமாட்டாது. இப்படியிருக்க, விக்கிரகங்களைக் கும்பிடுகிறது மகா வீணன காரியமென்று சொல்லவும் வேணுமா?

தேவன் கல்லுகளை ஏன் கொடுத்தார்? துணி தப்புகிறதற்கும், அரிசி குத்துகிறதற்கும், மிளகாய் அரைக்கிறதற்கும், வீடு கட்டுகிறதற்கும், சுவர் வைக்கிறதற்கும், இன்னும் இப்படிப்பட்ட பலவிதமான காரியங்களுக்கும், உபயோகமாகும்படிக்குத் தேவன் கல்லுகளைக் கொடுத்தாரேயல்லாமல், கும்பிடுகிறதற்குக் கொடுக்கவில்லையே.

கல்லினுலேமாத்திரமல்ல, மண்ணினுலும் பொன்னினுலும், செம்பினுலும், மரத்தினுலும், நீங்கள் விக்கிரகங்களைப் பண்ணுகிறீர்

கள். நீங்கள் எந்த விதமாய்ப் பண்ணினாலும், விக்கிரகம் தெய்வமல்லவே. எங்களையும் உங்களையும் மற்றெல்லா வஸ்துகளையும் உண்டாக்கினவனல்லவா தேவன்? விக்கிரகத்தை நீங்கள் பண்ணிவைத்தீர்களேயல்லாமல், அது உங்களை ஒருபோதும் உண்டாக்கவில்லையே. உங்களை உண்டாக்கினவரை நீங்கள் விட்டுவிட்டு, நீங்களே பண்ணிக்கொண்ட விக்கிரகங்களை உங்களுக்குத் தெய்வமாக வைக்கிறதும் கும்பிடுகிறதும் என்ன? புத்தியோ?

சிவவாக்கியர்.

பண்டுநான்பறித்தெறிந்தபன்மலர்களெத்தனை
பாழிலேசெபித்துவிட்டமந்திரங்களெத்தனை
தெண்டனாய்விழுந்தருண்டுகொண்டகோலமெத்தனை
தேரிழுக்கவூரழைத்துமாரடித்ததெத்தனை
மிண்டனாய்த்திரிந்தபோதிறைத்தநீர்களெத்தனை
மீளவுஞ்சிவாலயங்கள்சூழவந்ததெத்தனை
அண்டர்கோனிருப்பிடமறிந்துணர்ந்தஞானிகள்
கண்டகோயில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே.

சகோதரரே! விக்கிரகங்களைக் கும்பிடுகிறது வீணாயிருக்கிறதுமல்லாமல், அது தேவனுக்கு விரோதமான பெரிய பாவமுமாயிருக்கிறது. விக்கிரகங்களைக் கும்பிடக்கூடாதென்று தேவனே கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய கட்டளையைத் தள்ளி நடக்கிறது மகா

பாவமல்லவா? மெய்யான தேவன் ஒருவர் இருக்கும்போது, அவரைத் தொழுதுகொள்ளாமல், பொய்யான விக்கிரகங்களைக் கும்பிடுகிறது மிகுந்த அக்கிரமமல்லவா? நம்மை உருவாக்கின தேவன் ஒருவர் இருக்கும்போது, அவரைப் பணியாமல், நாமே உருவாக்கின சொரூபங்களைப் பூசிக்கிறது தேவ துரோகமல்லவா? மெய்யான தேவனுக்குமாத்திரமே தகுதியாயிருக்கிற பேர்களைச் சிலைகளுக்கும் கட்டைகளுக்கும் இடுகிறது தேவநிந்தையல்லவா? நம்மை இரட்சிக்கவும் சிட்சிக்கவும் திராணியுள்ள தேவன் ஒருவர் இருக்கும்போது, அவரை வணங்காமல், எள்ளளவும் திராணியற்ற பொம்மைகளைத் தெண்டனிடுகிறது புத்தியீனமல்லவா? புகழத் தக்க மேன்மையான தேவன் ஒருவர் இருக்கும்போது, அவரை ஸ்தோத்திரிக்காமல், இகழத் தக்க அற்பமான விக்கிரகங்களைத் துதிக்கிறது பைத்தியமல்லவா? நிதானித்துச் சொல்லுங்கள்.

ஓ சகோதரரே! பொம்மைகளைக் கும்பிடுகிறதினாலே நல்ல கதி கிடைக்குமென்று நினைத்து நீங்கள் அதுகளைக் கும்பிடுகிறீர்கள். ஆனாலும், அப்படி மோசப்பட்டுப்போகிறது நல்லதா? விக்கிரகங்களைக் கும்பிடுகிறதெல்லாம்

மகா பாவமே. ஆகையால், அதினாலே நரகம் கிடைக்குமேயல்லாமல், நல்ல கதி கிடைக்கவேமாட்டாது. உங்களுக்குள்ளேயும் சிலர் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

## சங்கராசாரியர்.

எத்தனைதான்கல்லுகளைப்பூசித்தாலும்
இனர்களேயுங்களுக்குமோட்சமுண்டோ
சுத்தமுடன்தலைமுழுகித்தவஞ்செய்தாலும்
சொல்லரியபேரின்பந்தோன்றுமோதான்
பித்தர்களேகல்லுகளைவிலைக்குவாங்கிப்
பிரானென்றேசிலையிலேமுடிந்துகொண்டு
செத்தபின்புகைலாயஞ்சேர்வோமென்றால்
சேர்வதில்லையருநரகஞ்சேர்வீர்தானே.

மண்ணிலேபிறந்தகல்லை வகைவகைதெரிந்தெடுத்தே
எண்ணிலாவிலிங்கமாக வியல்புடன்கோயில்கட்டிப்
பண்ணியேவைத்துப்பின்னும் பலபலபூசைசெய்தால்
விண்ணிலேசேர்வதில்லை வீணிலேநரகில்வீழ்வார்.

## இன்னொருவர்.

அண்ணலாம்பரமசோதி
யற்புதமறியாதாலே
கண்ணிலேகண்டதெல்லாங்
கதிதருங்கடவுளென்று
மண்ணுள்ளோர்வணங்குகின்றார்
வரன்முறைப்படியீதென்ன
எண்ணியேநடந்துமோட்ச
மிழந்தெரிநரகில்வீழ்வார்.

இரண்டாம் அதிகாரம் முற்றிற்று.

## மூன்றாம் அதிகாரம்.

### மெய்யான தேவனைக் குறித்துச் சொல்லியது.

தேவன் ஒருவன்தானென்று உங்களில் சிலர் சொல்லியிருக்கிறார்கள்.

கடவுளொன்றொருவனுண்டே வேதமொன்றே
காரணசற்குருதீட்சைதானுமொன்றே
அடைவுடனேயவனருளும்பதவியொன்றே
அம்புவியின்மனுப்பிறவியானதொன்றே
நடைவழியும்பலமனிதர்க்கொன்றேயல்லால்
நால்வேதமறுசமயநடக்கைவேறாய்த்
திடமுடையதேவர்பலருண்டென்போர்கள்
தீநரகுக்காளாவர்திண்ணந்தானே.

நீங்கள் ஞானிகளென்று சொல்லுகிற கொங்கணர் சிவவாக்கியர் முதலானவர்கள் இப்படிப்பட்ட அநேகம் பாடல்களைப்பாடி, விக்கிரகங்களெல்லாம் பொய்யென்றும், பிரமா விஷ்ணு சிவன் முதலானவர்களெல்லாம் இல்லையென்றும், தேவன் ஒருவர்மாத்திரம் இருக்கிறாரென்றும், மனுஷர்களுக்குப் பரம குரு

ஒருவர் வேண்டியதென்றும், சொல்லியிருக்கி றூர்கள். அவர்கள் அப்படிச் சொன்னது சரி யென்று நீங்கள் ஒத்துக்கொண்டு விக்கிரகங்க ளேயும் திரிமூர்த்திகளேயும் பொய்யென்று தள் ளிப்போடுங்கள். ஆனுலும், அந்த ஞானிக ளுடைய பாடல்களினுலே நீங்கள் மெய்யான தேவனேயும் மோட்சமார்க்கத்தையும் அறிய லாமென்று நினேத்தால், மோசப்பட்டுப்போ விர்கள். அந்த ஞானிகள் தேவன் ஒருவர் இ ருக்கிறுரென்றும், பரம குரு வேண்டியதென் றும், சொன்னுர்கள். ஆனுலும், அந்தத் தே வனேயும் பரம குருவையும் அவர்களும் அறி யவில்லே. மனுஷர்கள் பாவம் நீங்கி மோட் சம் அடையும் மார்க்கத்தையும் அவர்கள் அறி யவில்லே. ஆகையினுலே மற்றவர்கள் அறி யும்படி தங்கள் பாடல்களில் சொல்லவுமில்லே. அவர்கள் எத்தனே யோசனேகளே யோசித்தா லும், அவர்களுக்குச் சத்தியவேதம் இல்லா மையினுலே, அவர்கள் அறியவில்லே. எந்த மனுஷனும் தன் சொந்த யோசனேயினுலே தே வனேயும் பரம குருவையும் மோட்சமார்க்கத் தையும் அறிந்துகொள்ளமாட்டான். அதை அறியும்படி சத்தியவேதம் வேண்டியது. அப்

படிப்பட்ட வேதத்தைத் தேவனே கொடுக்க வேணும். அப்படிப்பட்டதைக் கொடுத்திருக்கிருர். அதுக்குக் கிறிஸ்துவேதமென்று பேர். அதுவே சத்தியவேதம். வேறே இல்லே. அது அநேக தேசங்களிலே பரம்பியிருக்கிறது. இந்தத் தேசத்திலேயும் வந்திருக்கிறது. அதை நம்பிப் படித்து அதின்படி நடக்கிறவன் தேவனேயும் பரம குருவையும் மோட்சமார்க்கத்தையும் அறிவானேயல்லாமல், அந்த வேதம் தெரியாதவன் எவ்வளவு யோசித்தாலும், எவ்வளவு படித்தாலும், வெகு பாடல்பாடி ஞானியென்று பேரெடுத்தாலும், அறியவும்மாட்டான்; சொல்லவும்மாட்டான். ஆகையிஞலே, அந்தச் சத்தியவேதத்தையே வாங்கிக்கொண்டு விசுவாசத்தோடே படித்து அதிலே சொல்லியிருக்கிறபடி நடவுங்கள். அந்தச் சத்தியவேதத்தில் மெய்யான தேவனேக்குறித்துச் சொல்லியிருக்கிற சில காரியங்களேக் கேளுங்கள்.

அந்த மெய்யான தேவனுக்கு யெகோவா என்று பேர். யெகோவா என்கிற சொல்லுக்கு எப்போதும் இருக்கிறவரென்று அர்த்தம். அந்த மெய்யான தேவன் அநாதியாயிருந்தார்; இப்போதும் இருக்கிருர்; இனிமேலும் என்

றென்றைக்கும் இருப்பார்; ஆகையால் அவர் யெகோவா என்று சொல்லப்பட்டிருக்கிறூர். அவர் ஒன்ருன பராபரவஸ்து. அவரிடத்தி லே எவ்வளவும் பாவம் இல்லே.

அவர் ரூபமில்லாமல் இருக்கிறவர். அவர் ஆதியும் அந்தமுமில்லாமல் இருக்கிறவர். அவர் எங்கும் நிறைந்திருக்கிறவர். அவர் சர்வ ஞானமும் சர்வவல்லமையும் உள்ளவர். அவர் மாருதவர். அவர் பரிசுத்தர். அவர் நீதியும் சத்தியமும் உடையவர். அவர் தயவும் இரக்க மும் உள்ளவர். அவர் தம்முடைய கட்ட ளேகளுக்கு இசைந்து நடக்கிறவர்களே மோட்ச லோகத்திலே சேர்க்கிறவராயும், தம்முடைய கட்டளேகளுக்கு விரோதமாய் நடக்கிறவர்களே நரகத்திலே தள்ளுகிறவராயும் இருக்கிறவர்.

அந்த ஒன்ருன பராபரவஸ்து மூவராயிருக் கிறது. அந்த மூவரும் மூன்று தேவர்களல்ல. அந்த மூவரும் அந்த ஒன்ருன பராபரவஸ்து வே. அந்த மூவரும் ஒருவருக்கு ஒருவர் உயர்வும் தாழ்வுமில்லாமல், ஒருவருக்கு ஒரு வர் சமானமாயிருக்கிறூர்கள். அந்த மூவருக் கும் மூன்று பேர்கள் உண்டு. ஒருவருக்குப் பிதா என்று பேர். ஒருவருக்குக் குமாரன்

என்று பேர். ஒருவருக்குப் பரிசுத்த ஆவி என்று பேர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, என்கிற அந்த மூவரும் ஒரே தேவன். ஆகையால் மெய்யான தேவனாயிருக்கிற யெகோவா திரியேக தேவனென்று சொல்லப்பட்டிருக்கிறார்.

ஒரே தேவனாயிருக்கிற அந்த மூவரிலே குமாரனென்று சொல்லப்பட்டவர் இருக்கிறாரே; அவரே பூலோகத்தில் மனுஷனாய் அவதரித்து மனுஷர்களுக்காக மோட்சமார்க்கத்தை உண்டாக்கின பரம குருவாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துநாதர்.

மூன்றும் அதிகாரம் முற்றிற்று.

# நாலாம் அதிகாரம்.

## பாவத்தைக் குறித்துச் சொல்லியது.

பூலோகத்திலே எந்த இடத்திலும் பாவமில்லாதவன் ஒருவனும் இல்லை. வெள்ளை மனுஷனானாலும் சரி, கறுப்பு மனுஷனானாலும் சரி, இராசாவானாலும் சரி, பிச்சைக்காரனானாலும் சரி, பூமியிலே இருக்கிற மனுஷர்களெல்லாரும் பாவம் செய்திருக்கிறார்கள். பாவமாவது என்னவென்று கேளுங்கள். தேவன் கொடுத்திருக்கிற கட்டளைகளுக்கு விரோதமாய் நடக்கிறதுதான் பாவம்.

பொய்யான தேவதைகளை வணங்க வேண்டாமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் பிரமா, விஷ்ணு, சிவன், பிள்ளையார், சுப்பிரமணியர், ஐயனார், பிடாரியார், மாரியம்மன் முதலான பொய்த் தேவதைகளை வணங்குகிறார்கள். அது பாவம்.

விக்கிரகங்களைக் கும்பிட வேண்டாமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் பலபல விக்கிரகங்களை வைத்துக் கொண்டு கும்பிடுகிறார்கள். அதுவும் பாவம்.

தேவனுடைய பேரைப் பயபத்தியோடே சொல்லவேணுமேயல்லாமல், அதை வீணாய்ச் சொல்லவேண்டாமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் தேவனுடைய பேரைப் பயபத்தியில்லாமல் எடுத்துச் சொல்லுகிறார்கள். அதுவும் பாவம்.

மனுஷர்கள் வழக்கமாய் மற்ற ஆறுநாள்களிலும் செய்துவருகிற வேலைகளை ஞாயிற்றுக்கிழமையிலே செய்யாமல் நிறுத்தி, அந்த நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேணுமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் அந்தப்படி செய்யாமல், மற்ற ஆறு நாளும் செய்துவருகிற வேலைகளை ஞாயிற்றுக்கிழமையிலும் செய்துவருகிறார்கள். அதுவும் பாவம்.

தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேணுமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் தங்கள் தகப்பனையும் தாயையும் நிந்திக்கிறார்கள். அதுவும் பாவம்.

மனுஷர்கள் ஒருவனை ஒருவர் கொல்ல வேண்டாமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் ஒருவர்மேல் ஒருவர் கோபங்கொண்டு சண்டைசெய்து அடித்துக் கொல்லுகிறார்கள். அதுவும் பாவம்.

மனுஷர்கள் அவன் அவன் தான் தான் விவாகஞ்செய்துகொண்ட பெண்சாதியோடே இருந்து வாழ வேணுமேயல்லாமல், வேறே எந்த ஸ்திரீயையும் விரும்பக்கூடாதென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் அந்தப்படி நடவாமல், வைப்பாட்டியை வைக்கிறதும் வேசியோடே திரிகிறதும் ஒருத்தனுடைய பெண்சாதியைக் கெடுக்கிறதும் முதலான அக்கிரமங்களைச் செய்கிறார்கள். அதுவும் பாவம்.

திருட வேண்டாமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் திருடுகிறார்கள். எத்தனையோ பேர்கள் அநேக விதமான மோசங்களைச் செய்கிறார்கள். அதுவும் பாவம்.

பொய் பேசவேண்டாமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் பொய் பேசுகிறார்கள். அதுவும் பாவம்.

ஒருவன் மற்றொருவனுடைய பொருளின் மேல் ஆசை வைக்கவேண்டாமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் மற்றவர்களுடைய சொத்துகளின்மேல் ஆசை வைக்கிறார்கள். எத்தனையோ பேர்கள் பல பல உபாயங்களுஞ்செய்து மற்றவர்களுடைய பொருள்களை அபகரித்துக்கொள்ளுகிறார்கள். அதுவும் பாவம்.

மனுஷர்கள் முழு இருதயத்தோடும் தேவன்மேல் அன்புவைத்து அவருக்கு அடங்கி நடக்கவேணுமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் மெய்யான தேவனைக் குறித்து எவ்வளவும் நினைப்பில்லாமல், தங்கள் கெட்ட இச்சைகளுக்கே இசைந்து தேவனுக்கு விரோதமாய் நடக்கிறார்கள். அதுவும் பாவம்.

மனுஷர்கள் ஒருவருக்கு ஒருவர் பொல்லாங்கு செய்யாமல், ஒருவனை ஒருவர் சிநேகித்து நடக்கவேணுமென்று தேவன் சொல்லியிருக்கிறார். எத்தனையோ பேர்கள், பலபல சாதிகள் உண்டென்கிற பொய்யை அனுசரித்து அன்பில்லாமல் ஒருவருக்கு ஒருவர் விரோதமாக நடக்கிறார்கள். எத்தனையோ

பேர்கள் ஒருவருக்கு ஒருவர் அநேகம் பொல்லாங்குகளைச் செய்துவருகிறார்கள். எத்தனையோ பேர்கள் பகையும் பொறாமையும் கொண்டு நடக்கிறார்கள். அப்படிப்பட்ட நடக்கைகளும் பாவம்.

இந்த விதங்களாய் மனுஷர்கள் தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக நடக்கிறார்கள். தேவகட்டளைகளுக்கு விரோதமாய் நடக்கிறதே பாவம். ஆகையால், மனுஷர்கள் யாவரும் பாவிகளாயிருக்கிறார்கள். உலகமெங்கும் தேடிப்பாருங்கள், எங்கேயாகிலும் பாவமில்லாதவன் ஒருவனாவது உண்டா? இல்லையே. மனுஷர்கள் பாவமென்கிற சமுத்திரத்திலே முழுகியிருக்கிறார்கள். ஐயையோ! மோட்சக் கரை ஏறுகிறது எப்படி? பாவிகளுக்குத் திக்கு யார்? கேளுங்கள். நம்முடைய பாவங்களை நீக்கி, நம்மைக் கரையேற்றுகிறதற்குப் பரம குரு வேணும்.

நாலாம் அதிகாரம் முற்றிற்று.

## ஐந்தாம் அதிகாரம்.

### மோட்சம், நரகம், என்கிற லோகங்களைக் குறித்துச் சொல்லியது.

நாம் பூலோகத்திலே எப்போதும் சாகாமல் இருக்கப்போகிறதில்லை. பெரியோர் சிறியோர் யாவரும் சாகவேண்டும். சாகிறபோது உடம்பு செத்துப்போகிறதேயல்லாமல், உடம்புக்குள்ளே இருக்கிற ஆத்துமா சாகிறதேயில்லை. நம்முடைய ஆத்துமா எப்போதும் சாகாமலிருக்கும். உடம்பு சாகும்போது ஆத்துமா உடம்பை விட்டு நீங்கும். உடம்பை விட்டு நீங்கும்போது ஆத்துமா வேறொரு சென்மம் எடுக்குமென்று நீங்கள் வழக்கமாய்ச் சொல்லுகிறீர்கள். ஆனாலும், அது மெய்யல்ல. அநேக சென்மங்கள் உண்டென்று சொல்லுகிறதெல்லாம் பொய்தான். முன் சென்மமும் இல்லை, பின் சென்மமும் இல்லையென்று சத்தியவேதம் சொல்லுகிறது. சென்

மாந்தரம் இல்லையென்றும், அது இருக்கிறதாகப் போதிக்கிறவர்கள் சனங்களை மோசம்பண்ணுகிறதற்கு அப்படிப் போதிக்கிறார்களென்றும், உங்களுக்குள்ளேயும் சிலர் சொல்லியிருக்கிறார்கள். பாருங்கள்.

## சிவவாக்கியர்.

கறந்தபால்முலைபுகாகடைந்தவெண்ணெய்மோர்புகா
உடைந்தசங்கினோசையுமுயிர்களுமுடல்புகா
வடிந்தவேரடியினினுதிர்ந்தபூமரம்புகா
இறந்துபோனமானிடரினிப்பிறப்பதில்லையே.

## ஞானவெட்டியான்.

இருவினைகடமையுளாத்தேயுலகத்தாசான்
எழுந்தவுடல்விழுந்தாவிபோனபின்பு
மறுசனனம்புகுந்துடலமெடுத்துப்பாரில்
வருமென்றுவேதத்தால்வகுத்துச்சொல்வான்
கருவடைந்துபுவியில்வந்துவயதுநூறு
கழிந்ததன்பின்பொழிந்ததென்றூற்குழந்தையாமோ
அறிவில்லார்மறுபிறவிபிறப்பாரென்றே
அமட்டிவெகுபொருள்பறிப்பாராண்டைமாரே.

மனுஷர்கள் இவ்வுலகத்தில் பிறக்கிறதும் ஒரே தரந்தான். அவர்கள் சாகிறதும் ஒரே தரந்தான். உடம்பு சாகிறபோது ஆத்துமா உடம்பை விட்டு நீங்கி மோட்சலோகத்திலேயாவது நரகத்திலேயாவது போய்ச் சேரும்.

சகோதரரே! இந்தப் பெரிய காரியத்தை நன்றாய்த் தெரிந்துகொள்ளுங்கள். மோட்ச

மென்கிற சுக ரூபமான ஒரு லோகம் இருக்கிறது. நரகமென்கிற துக்க ரூபமான ஒரு லோகமும் இருக்கிறது. சாகிற காலம் வரும்போது நாம் அந்த மோட்சத்திலேயாவது அந்த நரகத்திலேயாவது போய்ச் சேரவேண்டும். அந்த இரண்டு லோகங்களையுங்குறித்துக் கொஞ்சம் விரித்துச் சொல்லுகிறதைக் கேளுங்கள்.

மோட்சலோகம் எல்லா லோகங்களிலும் சிரேஷ்டமான லோகம். அங்கே பாவம் எவ்வளவும் இல்லை; எந்தக் கெடுதலும் இல்லை. அங்கே களங்கமும் இல்லை; ஒரு அழுக்கும் இல்லை. அங்கே எந்தப் பயமும் இல்லை; ஒரு திகிலும் இல்லை. அங்கே பசி அடைகிறதுமில்லை; தாகம் அடைகிறதுமில்லை. அங்கே வெயிலாவது மற்றெந்த உஷ்ணமாவது படுகிறதுமில்லை. அங்கே வியாதியும் இல்லை; எந்த விசனமும் இல்லை. அங்கே வருத்தமும் இல்லை; எந்தக் குறைவும் இல்லை. அங்கே துக்கிக்கிறதுமில்லை; கண்ணீர்விட்டு அலறுகிறதுமில்லை. அங்கே சாவும் இல்லை; எந்தச் சாபமும் இல்லை. அங்கே இருக்கிறவர்கள்மேல் தேவனுடைய கிருபை எப்போதும் பிரகாசமாயிருக்கிறது. அங்கே பரிசுத்தமே சம்பூரணமாய் நிறைந்தி

ருக்கிறது. அங்கே புத்திக்கு எட்டாத சவுக்கியங்களும் சந்தோஷங்களும் உண்டு. அதினுடைய மேன்மையையும் அதில் உள்ள பரமசுகத்தையும் யார்தான் சொல்லக் கூடும்? தம்முடைய கட்டளைகளின்படி நடக்கிறவர்களுக்குத் தேவன் அந்த நல்ல லோகத்தை நித்தியவாசஸ்தலமாய் ஏற்படுத்தியிருக்கிறுர். சிநேகிதர்களே! அதை அடைகிறது எவ்வளவு பாக்கியம்! அதை அடையாமல்போகிறது எவ்வளவு கேடு!

நரகம் எல்லா லோகங்களிலும் பயங்கரமான லோகம். அங்கே பரிசுத்தம் எவ்வளவும் இல்லை. அங்கே யாதொரு சவுக்கியமும் சந்தோஷமும் இல்லை. அங்கே தீராத தாகமும் நீங்காத பயமும் உண்டு. அங்கே எல்லாக் கேடுகளும் சொல்லிமுடியாத துக்கங்களும் உண்டு. அந்த நரகம் அக்கினிசமுத்திரம். அங்கே சேருகிறவர்கள் அங்கேயிருந்து ஒருபோதும் தப்பித்துக்கொண்டு வருகிறதற்குக் கூடாமையாய், பாவத்தினுலே உண்டாகிற தண்டனைகளை அங்கேயே எப்போதும் அனுபவிப்பார்கள். அவர்கள் அவ்விடத்து வேதனைகளைத் தாங்கக்கூடாமல், எந்நேரமும்

அழுதுக்கொண்டும் பல்லுகளைக் கடித்துக்கொண்டும் மிகுந்த கூக்குரலாய்ப் புலம்பிக்கொண்டும் இருப்பார்கள். அங்கே புத்திக்கு எட்டாத நோவுகளும் அவஸ்தைகளும் உண்டு. அதினுடைய கொடுமையையும் அதில் உள்ள பெருந்துக்கத்தையும் யார்தான் சொல்லக் கூடும்? தம்முடைய கட்டளைகளின்படி நடவாதவர்களை அடைத்துத் தண்டிக்கிறதற்குத் தேவன் அந்தப் பயங்கரமான லோகத்தை நித்திய சிறைச்சாலையாய் ஏற்படுத்தியிருக்கிறார். சிநேகிதர்களே! அதை அடைகிறது எவ்வளவு கேடு! அதை அடையாமல் போகிறது எவ்வளவு பாக்கியம்!

மனுஷர்கள் சாகிறபோது அந்த இரண்டு லோகங்களிலே ஒரு லோகத்தைச் சேர்ந்து, அவ்விடத்தில் இருக்கவேணுமென்று நன்றாய்த் தெரிந்துகொள்ளுங்கள். மோட்சலோகத்திலே சேர்ந்தால், ஒருபோதும் அங்கேயிருந்து தாழ்ந்துபோகிறதுமில்லை; ஒருபோதும் அங்கேயுள்ள இன்பங்களை நீங்கிக் கெட்டுப்போகிறதுமில்லை. மோட்சலோகத்தை அடைகிறவன் அங்கேயே என்றென்றைக்கும் நித்திய சந்தோஷங்களை அனுபவித்துக்கொண்டிருப்பான். நர

கத்திலே சேர்ந்தால், ஒருபோதும் அங்கேயிருந்து தப்புகிறதுமில்லை; ஒருபோதும் அங்கேயுள்ள துன்பங்களை நீங்கிச் சுகமடைகிறதுமில்லை. நரகத்தை அடைகிறவன் அங்கேயே என்றென்றைக்கும் நித்திய துக்கங்களை அனுபவித்துக்கொண்டிருப்பான்.

சிநேகிதர்களே! நீங்கள் சாகிறபோது எந்த லோகத்திலே சேரப்போகிறீர்கள்? மகிழ்ச்சி உள்ள மோட்சலோகத்திலேயா, வேதனை உள்ள நரகத்திலேயா, எதிலே சேரப்போகிறீர்கள்? இதை நீங்கள் அறிய வேண்டியதில்லையா? நரகத்திலே விழாமல் தப்பி மோட்சம் அடைகிறதற்கு வழியொன்று இருக்குமே! அதைத் தேடிக் கண்டுபிடிக்கத் தேவையில்லையா? மகா விசேஷித்த இந்தக் காரியத்தைக்குறித்து ஏனோதானோ என்று இருந்துவிடலாமா? சாகுங்காலம் கிட்டிக்கிட்டி வருகிறதே.

எந்த லோகத்திலே சேரப் போகிறோமோ அதை அறியக்கூடாதென்று சொல்லாதிருங்கள். அதைச் சந்தேகமற அறியலாம். தேவன் சத்தியவேதத்தினாலே அதைத் தெளிவாய்த் தெரியப்படுத்தியிருக்கிறார். நீங்கள் இவ்வுலகத்தில் உயிரோடே இருக்கும்போதே உங்க

ளுடைய பாவங்கள் நிவிர்த்தியானால், நீங்கள் சாகிற காலத்தில் நிச்சயமாகவே மோட்ச லோகத்தில் சேருவீர்கள். நீங்கள் இவ்வுலகத் தில் உயிரோடே இருக்கும்போதே உங்களு டைய பாவங்கள் நிவிர்த்தியாகாமலிருந்தால், நீங்கள் சாகிற காலத்தில் நிச்சயமாகவே நா கத்தில் சேருவீர்கள்.

பிரியமானவர்களே! உங்கள் பாவங்கள் நிவிர்த்தியாகவில்லையே. நீங்கள் நாகத்துக்கு நேர்வழியாய்ப் போகிறீர்களே. பாவங்கள் எப்படி நிவாரணமாகுமென்று நீங்கள் விசா ரிக்க வேண்டியதில்லையா? உங்கள் பாவங்களை நிவாரணம்பண்ணுகிறதற்கு உங்களாலே கூடு மா? கூடாதே. பின்னை எப்படி நிவாரணமா கும்? இதற்கு உபாயம் என்ன? வழி என்ன? பாவநாசர் ஒருவர் உண்டா? கரையேற்றுகிற வர் ஒருவர் இருக்கிறாரா? இதைச் சொல்லு கிறவனே உபகாரி. ஐயையோ! பாவங்களை விமோசனம்பண்ணுகிறதற்குத் தகுதியானவர் ஒருவர் இல்லாமல்போனால், அந்தப் பயங்கா மான நாகத்திலே விழவேண்டுமே.

ஐந்தாம் அதிகாரம் முற்றிற்று.

## ஆரும் அதிகாரம்.

### பாவ நிவாரண மார்க்கத்தைக் குறித்துச் சொல்லியது.

சகோதரரே! பாவம் நிவாரணமாகிறதைக் குறித்து நீங்கள் அநேக காரியங்களைச் சொல்லுகிறீர்கள். அதுகளைக் கொஞ்சம் சோதித்துப் பார்க்கவேண்டும்.

க-வது. காசி, ராமேசுரம், முதலான ஸ்தலங்களுக்குப் போனால், பாவம் நிவிர்த்தியாகுமென்று உங்களுக்குள்ளே சிலர் சொல்லுகிறார்கள். இதை நம்பலாமா?

காசிகாசியென்றுநீர் கால்கடுக்கவோடுநீர்
காசியோடியாடினுங் கறுப்புவெள்ளையாகுமோ.

தூரமான ஸ்தலங்களுக்குப் போகிறதினாலே கால் நோவும்; அது கொப்புளித்துப் போம்; முள்ளுதைக்கும்; கட்டின துணி திரும்பிவருகிறதற்குள்ளே கந்தையாய்ப் போ

கும்; பணம் செலவாகும்; உடம்பு இளைத்து மெலிந்துபோகும்; வியாதி கண்டாலும் காணும்; இப்படியெல்லாம் உண்டாகுமேயல்லாமல், பாவம் நிவிர்த்தியாகுமா? துர்க்குணம் நீங்குமா? இல்லையே.

உ-வது. கங்கை முதலான தீர்த்தங்களுக்குப் போய் ஸ்நானம்பண்ணினால், பாவம் போகுமென்று உங்களுக்குள்ளே சிலர் சொல்லுகிறார்கள். இது சரியா? இது சரியல்லவே.

தீர்த்தமாடினாலுமகப்பேய் தீவினைதீராதே
ஊத்தைபோனாலுமகப்பேய் உள்வினைபோகாதே.

கங்கை முதலான ஆறுகளில் இருக்கிற சலம் வேறே இங்கே இருக்கிற சலம் வேறேயா? மழையினாலேயும் மலையூற்றுகளினாலேயும் அல்லவா கங்காநதி பெருகி ஓடுகிறது? இங்கே இருக்கிற ஆறுகளும் அப்படித்தான் அல்லவா? அங்கேயும் இங்கேயும் மழைபெய்யவும், மலையூற்றுகள் பாயவும், பண்ணுகிற தேவன் ஒருவன்தானே! அங்கே இருக்கிற சலமும் இங்கே இருக்கிற சலமும் ஒன்றுதானே! வித்தியாசம் இல்லையே! அப்படியிருக்க, இவ்விடத்துச் சலம் உதவாதென்றும், அவ்விடத்

துச் சலம்மாத்திரம் உதவுமென்றும் சொல்லு கிறது என்ன? பொய்யல்லவா?

மேலும், எந்தச் சலமானாலும் ஆகட்டும், அதிலே இறங்கி ஸ்நானஞ்செய்கிறதினாலே பாவம் போகுமென்று நினைக்கிறது வெகு புத்தியில்லாமை அல்லவா? தண்ணீரினாலே உடம்பிலே இருக்கிற அழுக்குப் போகும். ஆனாலும், தண்ணீரினாலே பாவம் போகுமா? கெட்ட குணம் நல்லகுணமாய் மாறுமா? இல்லையே.

௩-வது. புண்ணியங்களைச் செய்தால் பாவம் தீருமென்று நீங்கள் முக்கியமாய்ச் சொல்லுகிறீர்கள். ஆனாலும், இது மெய்யாகுமா? சோதித்துப் பாருங்கள். மனுஷர்களெல்லாரும் பாவிகளாயிருக்கிறார்கள். அதை நீங்களும் ஒத்துக்கொள்ளுகிறீர்கள். எல்லா மனுஷர்களுடைய ஆத்துமாக்களும் பாவத்தினாலே அழுக்குப்பட்டிருக்கிறது. அவர்களுடைய குணம் பாவகுணமே. பாவகுணத்தையுடைய மனுஷர்கள் எதைப் புண்ணியமென்று செய்தாலும், அது புண்ணியமாகுமா? அவர்கள் எதைச் செய்தாலும், அதோடே அவர்களுடைய கெட்ட குணம் கலக்குமல்லவா? கெட்ட குணம் கலந்திருக்கிற செய்கை புண்ணியமாகுமா?

பாவிகள் செய்த காரியத்தைத் தேவன் புண்ணியமென்று ஒத்துக்கொள்ளுவாரா? பாவிகள் செய்கிற செய்கை பிரயோசனப்படுமா? அவர்கள் நல்ல காரியங்களைச் செய்தாலும் அவர்கள் பாவிகள்தானே? அவர்களுடைய குணம் பாவகுணந்தானே? ஆகையால் அவர்கள் செய்கிறதெல்லாம் அந்தப் பாவகுணத்தினாலே அசுத்தப்பட்டுப் போகுமல்லவா? அவர்களுடைய பாவகுணம் என்கிற விஷம் அவர்கள் செய்கிற எல்லாச் செய்கையிலும் ஏறுமல்லவா? சந்தேகம் இல்லை. மனுஷர்கள் பாவிகளாயிருக்கிறபடியினாலே அவர்கள் எதைச் செய்தாலும், அதோடே பாவம் கலந்திருக்குமேயல்லாமல், அது புண்ணியமாகமாட்டாது. ஆகையினாலே புண்ணியஞ்செய்கிறதற்கு மனுஷர்களுக்குத் திராணி இல்லை.

இன்னும் பாருங்கள். புண்ணியஞ்செய்கிறதற்கு மனுஷர்களுக்குத் திராணி இல்லை; திராணி இருந்தாலும், அந்தப் புண்ணியத்தினாலே பாவம் தீருமா? தீரமாட்டாதே. இதுக்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறோம், கேளுங்கள். ஒருவன் போய் வேறொருவனிடத்தில் ஆயிரம் வராகன் கடன்வாங்கி, அந்தப் பணத்தை

யெல்லாம் வீணாய்ச் செலவுசெய்து கடன்கொடுத்தவனை மோசம்பண்ணினான். அப்படிச் செய்கிறது குற்றம் அல்லவா? கடன்காரன் வந்து அவனைக் கொடு என்று நெருங்கிக் கேட்டான். அவனிடத்திலேயோ அந்தக் கடனைத் தீர்க்கிறதற்கு ஒரு காசும் இல்லை. பின்பு கடன்கொடுத்தவன் அவனைப் பிடித்து இராசாவினிடத்திலே கொண்டுபோய் நிறுத்தினான். இராசா விசாரித்தபோது கடன்பட்டவன் இராசாவை நோக்கி, அரசனே! நான் கடன் வாங்கி மோசம்பண்ணினது மெய்தான். நான் செய்தது குற்றமே. அப்படியிருந்தும், இனிமேல் நான் புண்ணியஞ்செய்யப் போகிறேன். அந்தப் புண்ணியத்தினாலே இந்தக் கடன் தீர்ந்துபோகாதா? லேசாய்த் தீர்ந்துபோகுமே: ஆகையினாலே நீர் என்னை விட்டுவிட வேணுமேயல்லாமல், என்னைத் தண்டிக்கலாகாதென்று சொன்னால், அதினாலே இராசா அவனை விட்டுவிடுவானா? விடமாட்டானே. அந்த இராசா கடன்பட்டவனைப் பார்த்து, நீ எத்தனை புண்ணியஞ்செய்தாலும், அதினாலே உன் கடன் தீருமா? ஒருபோதும் தீராதே, என்று சொல்லுவான் அல்லவா? பின்பு இராசா அவனைத்

தண்டிக்க வேண்டியதல்லவா? அவன் எத்தனை புண்ணியம் பண்ணினாலும், அவன் பட்ட கடன் அதினாலே தீரமாட்டாதே. அப்படியிருக்க, மனுஷர்கள் எத்தனை புண்ணியம் பண்ணினாலும், அவர்கள் தேவனுக்கு விரோதமாகச் செய்த பாவம் அதினாலே தீருமா? தீர மாட்டாதே.

ஆதலால் நன்றாய்த் தெரிந்துகொள்ளுங்கள். புண்ணியஞ்செய்ய மனுஷர்களுக்குத் திராணி இருந்தாலும், அந்தப் புண்ணியத்தினாலே அவர்களுடைய பாவம் எவ்வளவும் தீராது. புண்ணியஞ்செய்கிறதற்கோ மனுஷர்களுக்குத் திராணி இல்லவே இல்லை.

ச—வது. இனிமேல் பாவஞ்செய்யாமல் நன்மையாய் நடந்தால் பாவம் நிவாரணமாகுமென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தப் பேச்சு நிற்குமா? நிதானித்துப் பாருங்கள். இனிமேல் பாவஞ்செய்யாமல் நன்மையாய் நடக்கவேணும். அது சரிதான். அப்படி இனிமேல் நன்மையாய் நடந்தாலும், இதுக்குமுன்னே செய்த பாவம் அதினாலே போய்விடுமா? போகமாட்டாதே. எப்போதும் நன்மையாய்த்தான் நடக்கவேணும். இதுக்குமுன் பாவமாய் நடந்தோ

மே. இனிமேல் பாவம் ஒன்றும் செய்யாமல் நன்மையாய்மாத்திரம் நடந்தாலும், அது அதின்மட்டுக்குச் சரிப்படுமேயல்லாமல், இதுக்குமுன் செய்த பாவம் அதினாலே எப்படித் தீரும்? கடன்வாங்கி மோசம்பண்ணினவன் இனிமேல் கடன்பட்டு மோசம்பண்ணாமல் சரியாய் நடந்தாலும், அவன் முன்பட்ட கடன் அதினாலே தீருமா? தீராதே. அப்படிப்போல, இனிமேல் பாவஞ்செய்யாமல் நன்மையாய் நடந்தாலும், முன் செய்த பாவம் அதினாலே நிவாரணமாகுமா? ஆகமாட்டாதே.

௫-வது. தேவனைத் துதிசெய்தால், அதினாலே பாவம் விமோசனமாகுமென்று சிலர் சொல்லுகிறார்கள். தேவனே சமஸ்த உபகாரங்களையும் செய்கிறவர். மனுஷர்கள் அவரை எந்நாளும் துதிக்கவேண்டியது. அப்படியிருந்தும், துதிக்கிறதினாலே அவர்கள் செய்த பாவம் எப்படிப் போகும்? கடன்கொடுத்தவன் தன்னிடத்தில் கடன்வாங்கி மோசம்பண்ணினவனைப் பிடித்து இராசாவினிடத்தில் கொண்டுபோய் நிறுத்தும்போது அந்தக் கடன்பட்டவன் இராசாவைப் பார்த்துத் துதிசெய்தால், அவன் பட்ட கடன் அதினாலே தீருமா? தீரா

தே. அதுபோல, பாவஞ்செய்த மனுஷர்கள் தேவனைத் துதித்தால், அவர்கள் செய்த பாவம் அதினலே விமோசனமாகுமா? ஆகமாட்டாதே.

இன்னும் கேளுங்கள். நீங்கள் திருவிளக்கு வைத்தாலும், விபூதி நாமம் இட்டுக்கொண்டாலும், உருத்திராட்சம் துளசிமணி போட்டுக்கொண்டாலும், புராணங்களை வாசித்துப் பூசித்தாலும், நாமகீர்த்தனஞ்செய்தாலும், நமசிவாய என்கிற பஞ்சாட்சரமும் ஓம் நமோநாராயணய என்கிற அஷ்டாட்சரமும் செபித்தாலும், யாகம்பண்ணினலும், காவடி எடுத்தாலும், விரதங்கள் அநேகம் செய்தாலும், அங்கப்பிரதட்சிணம் பண்ணினலும், வேஷங்கள் போட்டுக்கொண்டாலும், வனவாசஞ்செய்தாலும், சந்நியாசம் பண்ணிக்கொண்டாலும், உங்கள் பாவம் அதிகமாகுமேயல்லாமல் எவ்வளவும் நிவிர்த்தியாகவே மாட்டாது.

ஒரு வார்த்தை கேளுங்கள். மனுஷர்கள் என்ன செய்தாலும், என்ன பிரயாசத்தை எடுத்துக்கொண்டாலும், தாங்கள் செய்த கோடா கோடி பாவங்களிலே ஒரே ஒரு பாவத்தை யானலும் நிவிர்த்திபண்ணவே மாட்டார்கள்.

தங்கள் பாவங்களைப் போக்கடிக்கிறதற்கு மனுஷர்களுக்கு எவ்வளவும் திராணி இல்லை.

மனுஷர்களுடைய பாவங்களை நிவாரணம் பண்ணுகிறதற்குத் தகுந்த இரட்சகர் ஒருவர் வேணும். அது நிச்சயமான வார்த்தை.

சகோதரரே! செவிகொடுத்து ஆசையோடே கேளுங்கள். பாவத்தினாலே கெட்டுப்போன மனுஷர்களை இரட்சிக்கிறதற்கு மெய்யான இரட்சகர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இயேசுக்கிறிஸ்து என்று பேர். அவர் கிருபை நிறைந்தவர். அவரே பரம குரு. அவரே பாவங்களை நாசப்படுத்துகிறவர். அவரே பாவிகளுக்குத் திக்கு. பாவங்களை நீக்கவும், பாவிகளை இரட்சிக்கவும், வல்லவர் அவரேயல்லாமல், வேறில்லை.

இயேசு என்கிற சொல்லுக்கு இரட்சகர் என்று அர்த்தம். தம்மை இவ்வுலகத்தில் நம்பி நடக்கிற மனுஷர்கள் நரகத்திலே விழாதபடி அவர் அவர்களுடைய பாவங்களை நிவாரணஞ் செய்கிறார்; அவர்களை மோட்சலோகத்திலே சேர்க்கிறார்; இவ்விதமாய் இரட்சிக்கிறார்; ஆகையால் அவருக்கு இயேசு என்று பேர். கிறிஸ்து என்கிற சொல்லுக்கு அபிஷேகம் பெற்ற

வர் என்று அர்த்தம். அவரே உலகத்துக்குச் சற்குருவுமாய், பரம ராசாவுமாய் இருக்கிறு ரென்கிறது அதினுடைய தாற்பரியம். இப்படியிருக்க, இயேசுக்கிறிஸ்து என்று சொன்னுல், லோகரட்சகராயிருக்கிற பரமகுரு என்று அர்த்தமாகும்.

இயேசுக்கிறிஸ்துநாதர் தேவனுடைய குமாரனுயிருக்கிறுர். பாவிகளாயிருக்கிற மனுஷர்கள்மேல் தேவன் அன்புவைத்து அவர்களுக்காகப் பாவ நிவாரண மார்க்கத்தை உண்டாக்கும்படி தம்முடைய குமாரனுயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை இந்தப் பூலோகத்துக்கு அனுப்பினுர். தேவனுடைய ஆச்சரியமான கிருபையைப் பாருங்கள். பாபாத்துமாக்களை இரட்சிக்கும்படிக்குத் தம்முடைய குமாரனையும் கொடுத்தார்.

பராபரவஸ்து ஒன்றே. அந்த ஒன்றுன பராபரவஸ்து, பிதா குமாரன் பரிசுத்தஆவி என்கிற மூவராயிருக்கிறது. அந்த மூவரும் மூன்று தேவர்களல்ல. அந்த மூவரும் அந்த ஒன்றுன பராபரவஸ்துவே என்று முன்னேயே சொல்லிக்காண்பித்தோம். ஒரே தேவனுயிருக்கிற அந்த மூவரிலே குமாரனென்கிற

வர் இருக்கிருரே, அவர்தான் இயேசுக்கிறிஸ்து நாதர். பிதாவென்கிறவர் குமாரனென்கிற இயேசுக்கிறிஸ்துவைப் பூலோகத்துக்கு அனுப்பினுர். குமாரனென்கிறவர் பூலோகத்துக்குவந்து அவதாரமெடுக்கப் போகிறபோது, அவருக்காகப் பரிசுத்தஆவியென்கிறவர் மரியாளென்கிற கன்னியின் கர்ப்பத்தில் ஒரு பரிசுத்த மனுஷசுபாவத்தை உண்டாக்கினுர். குமாரனென்கிற இயேசுக்கிறிஸ்து பரிசுத்தஆவியினுலே உண்டாக்கப்பட்ட அந்த மனுஷசுபாவத்தைத் தம்முடைய தேவசுபாவத்தோடே சேர்த்துக்கொண்டு இவ்வுலகத்திலே பிறந்தார். இவ்விதமாக இயேசுக்கிறிஸ்துநாதர் மனுஷனுய் அவதாரஞ்செய்தார்.

மூவாயிருக்கிற ஒரே பராபரவஸ்துவுக்குள்ளே இயேசுக்கிறிஸ்து ஒருவராயிருக்கிறபடியினுலே அவர் தேவனுயிருக்கிருர். அவர் மனுஷர்கள்மேல் இரக்கம்வைத்தபடியினுலே, அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தியாகிறதற்கு ஒரு வழியை உண்டாக்கும்படி, நன்மை நிறைந்த மோட்சலோகத்தை விட்டுத் தீமை நிறைந்த இந்தப் பூலோகத்துக்கு இறங்கி

வந்து மனுஷனுய்ப் பிறந்தார். இதுவே தேவ அவதாரம். இதுவே மனுஷர்களுக்கு வேண்டியது. இந்த அவதாரமே மெய்யாயிருக்கிறது. வேறே இல்லை.

தயவுள்ள இயேசுக்கிறிஸ்துநாதர் இந்தப் பூலோகத்தில் முப்பத்து மூன்று வருஷம் இருந்தார். அவர் பூலோகத்தில் இருந்தபோது, யாவரும் அறியும்படி அநேக அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்தார். அவர் தம்முடைய வாக்கினுலே குருடருக்குக் கண்களைக் கொடுத்தார். செவிடருக்குக் காதுகளைத் தந்தார். ஊமைகளுக்கு வாயையும் அருளிச்செய்தார். அவர் தம்முடைய வாக்கினுலே சப்பாணிகளையும் முடவர்களையும் சொஸ்தமாய் நடக்கப் பண்ணினுர். அவர் தம்முடைய வாக்கினுலே குஷ்டரோகம் முதலான தீராத வியாதிகளையெல்லாம் தீர்த்தார். செத்துப்போனவர்களும் உயிரடைந்து பிழைக்கும்படி செய்தார். அவர் தம்முடைய வாக்கினுலே பிசாசுகளைத் துரத்தினுர். அவர் காற்றுக்கும் கடலுக்கும் கட்டளையிட்டு அதுகளைத் தம்முடைய இஷ்டத்தின்படி நடத்தினுர். இப்படிப்பட்ட ஆச்சரியங்களையும் அற்புதங்களையும் பண்ணினுர்.

இப்படிப்பட்ட பெரிய உபகாரங்களை மனுஷர்களுக்குக் கிருபைசெய்தார்.

இயேசுக்கிறிஸ்துநாதர் பூலோகத்திலே மகா பரிசுத்தமாய் நடந்தார். அவர் தம்முடைய பரிசுத்த நடத்தையினாலே சன்மார்க்கம் இன்னதென்று வெளிப்படுத்தினார் பாவமான நடத்தைகளை நடக்க வேண்டாமென்று அவர் மனுஷர்களுக்குப் போதித்து, தாமே அவர்களுக்கு நல்ல நடத்தைகளைக் காண்பித்தார். பூலோகத்துக்குச் சத்திய உபதேசங்களை அன்போடே உபதேசித்தார்.

பாவமில்லாத இயேசுக்கிறிஸ்துநாதர் பாவமுள்ள மனுஷர்களுக்காகப் பாடுபட்டுத் தம்முடைய சீவனைப் பலியாய்க் கொடுத்தார். பாவிகளுக்காகப் பாடுபட வேணுமென்று அவர் மோட்சலோகத்தை விட்டார். பாவிகளுக்காகத் தம்முடைய பிராணனைக் கொடுக்க வேணுமென்று அவர் பூலோகத்துக்கு வந்தார். அவர் பாவிகள்நிமித்தம் சகித்த அவஸ்தைகளைச் சரியாய்ச் சொல்லுகிறதற்கு யாராலே கூடும்? தம்முடைய வேர்வை இரத்தத்துளிகளாய் ஒழுகிப் பூமியிலே விழும்படியான வேதனையை அவர் பாவிகளுக்காகத் தம்முடைய

ஆத்துமாவிலே அனுபவித்தார். சிலுவைமரத்தில் அறையப்பட்டுச் சாகும்படியாகவும் தம்மைத் தாமே பலியாய் ஒப்புக்கொடுத்தார்.

அவர் ஒருவரே பூலோகத்தில் பாவமில்லாமல் பரிசுத்தமாய் நடந்தபடியினாலேயும், பாவ நடத்தைகளாய் நடக்கவேண்டாமென்று மனுஷர்களுக்கு அவர் உறுதியாய்ப் போதித்தபடியினாலேயும், பொல்லாத மனுஷர்கள் அவரைப் பகைத்தார்கள். அவரைக் கொலைசெய்ய வேணுமென்று விரும்பினார்கள். அவர் பாவிகளுக்காக மரணம் அடையும்படி வந்தபடியினாலே, தம்மைப் பிடித்துக் கொலைசெய்ய வேணுமென்று துணிந்த அந்தப் பொல்லாத மனுஷர்களை அவர் தடங்கல் செய்யாமலிருந்தார். அவர்களை ஒரு நொடியிலே அழித்துப்போடுகிறதற்கு அவருக்கு வல்லமை உண்டு. அவருக்கு அப்படிப்பட்ட வல்லமை இருந்தும், தாம் வந்த காரியம் நிறைவேறும்படி, அவர்களை அழிக்கவுமில்லை, அவர்களை யாதொரு தடங்கல் செய்யவுமில்லை. அந்தப் பொல்லாத மனுஷர்கள் தமக்குச் செய்ததையெல்லாம் அவர் சாந்தமாய் அனுபவித்தார். அவர்கள் அவரை அடித்தார்கள். அவர்கள் முள்ளுகளால்

ஒரு முடியைப் பின்னி, அதை அவருடைய சிரசின்மேல் வைத்து அவரைப் பரியாசம்பண்ணினார்கள். அவர்கள் அவர்மேலே துப்பினார்கள். அவர்கள் அவரைச் சிலுவைமாத்திலே சேர்த்து அவருடைய நன்மையான கைகளிலும் கால்களிலும் ஆணிகளை உருவ அடித்தார்கள். அங்கே அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அவர் சிலுவைமாத்தில் பாடுபடும்போது தம்மைப் பாடுபடுத்தின துஷ்ட மனுஷர்களை அவர் இரக்கத்தோடே பார்த்தார். பிதாவே! இவர்களுக்கு மன்னித்தருளும், இவர்கள் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்களென்று சொல்லி அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தார். அவர் அவஸ்தைப் படும்போது சூரியன் இருண்டது. சிலுவைமாத்தில் அவர் தம்முடைய சீவனை விட்டார். அப்போது பூமியும் அதிர்ந்தது. கல்மலைகளும் இரண்டாய்ப் பிளந்துபோனதுகள்.

பின்பு அவருடைய தேகம் கல்லறையில் வைக்கப்பட்டது. உயிரை விட்ட மூன்றும் நாளிலே அவர் மறுபடியும் உயிரோடே கல்லறையிலிருந்து எழுந்து புறப்பட்டு வந்து பூலோகத்தில் அநேகருக்குத் தரிசனமாகி நாற்

பது நாள்வரைக்கும் பூலோகத்திலே தங்கினார். அந்த நாற்பது நாள்களிலே அவர் தம்முடைய சீஷர்களுக்கு வேண்டிய உபதேசங்களைச் செய்து, அவர்கள் தம்மைக்குறித்து லோகமெங்கும் பிரசங்கம்பண்ணும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். பின்பு அவர் பூலோகத்தை விட்டு ஆகாசமார்க்கமாய் மோட்சலோகத்துக்கு எழுந்தருளிப்போனார். அங்கே அவர் தேவனுடைய வலது பக்கத்தில் இருக்கிறார். இந்தப் பூலோகத்தில் தம்மை நம்பி நடக்கிறவர்களுக்காக அவர் அங்கே வேண்டுதல் செய்கிறார்.

சகோதரரே! இயேசுக்கிறிஸ்துநாதர் இப்படி ஏன் பாடுபட்டார்? அவர், தாம் ஏதாவது பாவஞ்செய்து, அதற்காகப் பாடுபட்டாரோ? இல்லையே. அவர் ஒருபோதும் ஒரு பாவத்தையும் செய்ததேயில்லை. அவர் பூரண பரிசுத்தர். பாவமென்கிற இருளினாலே மூடப்பட்ட இந்தப் பூமியிலே அவர் பரம ஒளியாய்ப் பிரகாசித்தார். மனுஷர்களே பாவிகளாயிருக்கிறார்கள். அவர்கள் செய்த பாவங்களுக்காகவே அவர் இப்படிப் பாடுபட்டார். மலைகளைப்பார்க்கிலும் பாரமாயிருக்கிற

மனுஷர்களுடைய பாவங்களை அவர் தோள் கொடுத்துச் சுமந்தார். அவர் தம்முடைய ஆத்துமாவில் வேதனைப்பட்டதும், அவருடைய தேகத்தில் இரத்தவேர்வையிட்டதும், மனுஷர்களுடைய பாவங்களுக்காகவே. அவர் அடிவாங்கினதும், இகழ்ச்சி தாங்கினதும், மனுஷர்களுடைய பாவங்களுக்காகவே. அவர் சிலுவைமரத்தில் அறையப்பட்டதும், தம்முடைய சீவனை விட்டதும், மனுஷர்களுடைய பாவங்களுக்காகவே. ஓ சகோதரரே! இதை நோக்கிப்பாருங்கள். இயேசுக்கிறிஸ்துவின் அன்பு சொல்ல முடியாததல்லவா? சமுத்திரத்துக்கு அடியும் உண்டு; அதற்குக் கரையும் உண்டு; இயேசுக்கிறிஸ்துவின் அன்புக்கோ அடியும் இல்லை; அதற்குக் கரையும் இல்லை. அவருடைய அன்பு அளவில்லாத அன்பு.

யாராவது ஒருவன் ஒரு குற்றஞ்செய்தால், அவனுக்கு அந்தக் குற்றத்துக்குத் தகுந்த தண்டனை கிடைக்கவேண்டியது. அது நியாயம். மனுஷர்கள் தேவனுடைய கட்டளைகளைத் தள்ளிப் பாவம் செய்திருக்கிறார்கள். பாவத்துக்குத் தகுந்த தண்டனை நரகமே. ஆகையால் எல்லா மனுஷர்களும் நரக தண்டனையை

அடைகிறதற்குத் தக்கவர்களாயிருக்கிறார்கள். அதை அடைகிறவர்கள் அதிலிருந்து ஒருபோதும் தப்பக்கூடாது. மனுஷர்கள் அந்த நித்திய நரகதண்டனையை அடையாமல் தப்புகிறதற்கு வழியை உண்டாக்கும்படி இயேசுக்கிறிஸ்து வந்து அவர்களுக்காகப் பாடுபட்டார்.

கடன்பட்டவன் ஒருவனை மறுபடியும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு, சில காரியங்களைச் சொல்லுகிறோம், கேளுங்கள்.

விசாலமாயிருக்கிற இந்தப் பூமியில் உள்ள தேசங்களில் மகா செழிப்பான ஒரு தேசத்திலே செங்கோலைப்பிடித்து, பிரசைகளை நீதியின்படி நடத்தி, இராச்சியபரிபாலனம் செய்துகொண்டுவந்த ஒரு நல்ல இராசா இருந்தான். அவன் அரசாண்ட அந்தத் தேசத்தில் ஒரு மனுஷன் ஒரு லட்சம் ரூபாய் மற்றொருவனிடத்திலே கடனாய் வாங்கி, அதை முதல்பணமாக வைத்து வியாபாரஞ்செய்யாமல், அதை விருதாவாய்ச் செலவழித்து, தனக்கு அந்தக் கடன்கொடுத்தவனை மோசஞ்செய்தான். பின்பு அந்தக் காரியம் அந்தத் தேசத்து இராசாவினிடத்திலே விசாரணைக்கு வந்தது. அந்த மனுஷன் கடன்வாங்கி மோசஞ்செய்தானென்று

இராசாவின் சமுகத்திலே ரூபிக்கப்பட்டது. அப்போது அவன் தான் செய்த குற்றத்துக்காகத் தனக்குத் தண்டனை வரப்போகிறதென்று அறிந்தான். தன் கடனைத் தீர்க்க ஒரு உபாயமும் அவன் காணவில்லை. தனக்கு வரப்போகிற தண்டனைக்குத் தப்ப ஒரு வழியும் தெரியவில்லை.

அந்தத் தருணத்திலே இராசாவின் குமாரன் அந்தச் சங்கதியை அறிந்து, மனம் இரங்கி, அங்கே வந்து இராசாவைப் பார்த்து: இராசாவே! இவன் செய்த குற்றத்தை என் குற்றமென்று நான் எடுத்துக்கொள்ளுகிறேன்; இவன் கடனை என் கடனென்று ஏற்றுக்கொள்ளுகிறேன்; இவன் குற்றவாளிதான்; இவனைத் தண்டிக்கிறது சரியே; அப்படியிருந்தும், இவன்மேல் என் மனசு இரக்கத்தோடே உருகியிருக்கிறது; இவன் படவேண்டியதை நான் படுகிறேன்; இவன் கொடுக்கவேண்டியதை நான் கொடுக்கிறேன்; என் வீடு வாசல் தோட்டம் துரவு நான் விற்றுப்போட்டுப் பணத்தைச் சேர்த்துக்கொண்டு இவனுடைய கடனுக்கு ஈடாக அதை உம்மிடத்தில் கொண்டு வந்து வைக்கிறேன்; நான் தரித்திரனாய்ப்போ

ணலும், வெகு கஷ்டப்பட்டாலும், இவனை மீட்டுக்கொள்ளுகிறதற்கு எனக்கு ஆசை உண்டென்று சொன்னான். இப்படிச் சொல்லி அந்த இராசகுமாரன் கடன்பட்டவனுக்காக உடன்பட்டுப் போய்த் தனக்குண்டானதெல்லாம் விற்றுப் பணத்தை இராசாவினிடத்திலே கொண்டுவந்து வைத்தான்.

அப்போது இராசா கடன்பட்டவனைப் பார்த்து: ஓ குற்றவாளியே! நான் உன்னைத் தண்டித்தால் சரியாயிருக்கும்; அப்படியிருந்தும், என் குமாரனுக்கும் எனக்கும் ஒரே மனம் இருக்கிறது; நீ தண்டனை அடையாமல் தப்பிச் சவுக்கியப்படுகிறது எனக்கு இஷ்டமே; நீ செய்த குற்றத்தை நீ நினைத்துப் பார்த்துக்கொண்டு உன்னைக் குற்றவாளியென்று உணர்ந்துகொள்; உன்னைத் தண்டிக்கிறது நியாயமென்று ஒத்துக்கொள்; உன் துன்மார்க்கத்தைக் குறித்து மனஸ்தாபப்படு; இனிமேல் அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யாதே; என் குமாரன் உனக்காகச் செய்த கிருபையை நோக்கிப்பார்; அவரிடத்தில் விசுவாசம் வைத்து, இனிமேல் அவர் சொல்லுகிறபடி நட; இப்படிச் செய்கிறதற்கு நீ சம்மதித்தால், என்

குமாரன் இங்கே கொண்டுவந்து வைத்த பணத்தை நான் உன் கடனுக்கு ஈடாக ஏற்றுக்கொண்டு அதைக் கடன்காரனிடத்தில் கொடுத்துச் சரிக்கட்டி உன்னைத் தண்டிக்காமல் விடுவேனென்று சொன்னான்.

இராசா அப்படிச் சொல்லவே, அந்தக் கடன்பட்டவன் இராசாவைப் பார்த்து: ஓ இராசாவே! நான் செய்த குற்றத்தை உணருகிறேன்; நான் குற்றவாளிதான்; என்னை நீர் தண்டிக்கிறது நியாயமே! நீர் இப்போது சொன்ன தயவான வார்த்தையோ எனக்கு மெத்த சந்தோஷம்; நான் அதற்கு வெகு ஆசையோடே சம்மதிக்கிறேன்; உம்முடைய குமாரன் செய்த உபகாரத்தை நான் மறப்பேனோ? அவர் என்னை மீட்டுக்கொண்டவரென்று நான் அவரிடத்தில் விசுவாசம் வைத்து அவருடைய வார்த்தையின்படியே இனிமேல் நடப்பேன்; ஓ இராசாவே! அவருடைய முகத்தைப்பார்த்து என் குற்றத்தை மன்னியுமென்று தாழ்மையான மனசோடே கேட்டுக்கொண்டான். அப்போது இராசா தன்னுடைய குமாரன் கொண்டுவந்து வைத்த பணத்தைக் கடன்காரனிடத்தில் செலுத்தி, கடன்பட்டவனைக் கிருபையோ

டே பார்த்து அவனுடைய குற்றத்தை மன்னித்து அவனைத் தண்டிக்காமல் விட்டான். ஆகையால் அவன் இனிமேல் பயப்படுகிறதற்குக் காரணம் இல்லையே. அவனுக்குத் தண்டனை வாராதே. இனிமேல் அவன், தன் கடனைத் தீர்த்துத் தனக்குத் தண்டனை வாராதபடி தப்புவித்த அந்த இராசகுமாரனிடத்தில் மிகவும் ஆசைவைத்து அவன் சொல்லுகிறபடி நடப்பானல்லவா?

அப்படியில்லாமல், இராசா சொன்ன வார்த்தையைக் கடன்பட்டவன் கேட்கும்போது, அவன் இராசாவைப் பார்த்து: ஓ இராசாவே! உம்முடைய குமாரனுக்கும் எனக்கும் சம்பந்தம் என்ன? அவர் வந்து எனக்காக உம்மண்டை பணம் வைக்க வேண்டிய அவசரம் என்ன? எனக்குப் பிரியமில்லை; நான் உம்முடைய வார்த்தைக்குச் சம்மதிக்கிறதில்லை; உம்முடைய குமாரனிடத்தில் நான் விசுவாசம் வைக்கவும் மாட்டேன்; அவர் சொல்லுகிறபடி நடக்கவும் மாட்டேன்; அவருடைய சகாயமும் வேண்டாம்; உம்முடைய கிருபையும் தேவையில்லை என்று சொன்னால், அந்த இராசா அவனைப் பலமாய்த் தண்டிக்கமாட்டானா?

ஓ இவன் எத்தனை மூர்க்கன்! எவ்வளவு துஷ்டன்! தான் செய்த குற்றத்தை உணர்ந்தவனுமல்ல; நாம் செய்த உபகாரத்தை அறிந்தவனுமல்ல; நம்முடைய கிருபையையும் மதிக்காமல் அசட்டைபண்ணுகிறனே! இவனை இரட்டிப்பாய்த் தண்டிக்கவேணுமே என்று சொல்லி, அவனைப் பூர்த்தியாய்த் தண்டிப்பானல்லவா?

சகோதரரே! இதை உற்றுப்பாருங்கள். தன் கடனைத் தீர்க்கிறதற்கு அந்தக் கடன்பட்டவனுக்குத் திராணி இருந்ததில்லையே. அப்படிப்போல, தங்களுடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிறதற்கு மனுஷர்களுக்கு எவ்வளவும் திராணி இல்லை.

தனக்கு வரப்போகிற தண்டனையை அடையாமல் தப்புகிறதற்கு ஒரு வழியைப் பண்ணிக்கொள்ள அந்தக் கடன்பட்டவனுக்குத் திராணி இல்லையே. அப்படிப்போல, பாவத்துக்கு வரவேண்டிய நரகதண்டனையை அடையாமல் தப்புகிறதற்கு ஒரு வழியைப் பண்ணிக்கொள்ள மனுஷர்களுக்குத் திராணி இல்லை.

இராசகுமாரன் கடன்பட்டவன்மேல் மனம் உருகி அவனை மீட்க வேணுமென்று அவன் பக்கத்தில் வந்தானே. அப்படிப்போல, தேவ குமாரனாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துநாதர் பாவிகள்மேல் மனம் உருகி அவர்களை மீட்க வேணுமென்று இந்தப் பூலோகத்தில் வந்தார்.

இராசகுமாரன் கடன்பட்டவனுடைய குற்றத்தைத் தன் குற்றமாயிருந்தாற்போலே சுமந்தானே. அப்படிப்போல, இயேசுக்கிறிஸ்து மனுஷர்களுடைய பாவங்களைத் தம்முடைய பாவமாயிருந்தாற்போலே சுமந்தார்.

அப்படியிருந்தும், இராசகுமாரனிடத்தில் குற்றம் ஒன்றும் இல்லையே. கடன்பட்டவனே குற்றவாளியல்லவா? அப்படிப்போல, இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் பாவம் ஒன்றும் இல்லை. மனுஷர்களே பாவிகள்.

இராசகுமாரன் தன் பொருள்களையெல்லாம் விற்றுத் தன் திரவியங்களையெல்லாம் அந்தக் கடன்பட்டவனுக்காகக் கொடுத்தானே. அப்படிப்போல, இயேசுக்கிறிஸ்து பணத்தையல்ல தம்முடைய சீவனைப் பாவிகளுக்காகக் கொடுத்தார்.

கடன்பட்டவனுடைய கடன் தீருகிறதற்கு ஒரு வழி உண்டாகும்படி தயவுள்ள இராச குமாரன் இப்படிக் கஷ்டப்பட்டு, தனக்குண் டானதெல்லாம் ஒப்பித்தானே. அப்படிப் போல, மனுஷர்களுடைய பாவங்கள் நிவிர்த் தியாகிறதற்கு ஒரு வழி உண்டாகும்படி தய வுள்ள இயேசுக்கிறிஸ்து சொல்லிமுடியாத வேதனைகளை அனுபவித்து, தம்முடைய சீவனை ஒப்பித்தார்.

இராசா கடன்பட்டவனைப் பார்த்து: ஓ குற் றவாளியே! என் குமாரன் உனக்காகச் செய் ததைப் பார்; உன் கடன் தீருகிறதற்கு ஒரு வழி பண்ணினார்; நீ உன் குற்றத்தை அறிந்து கொண்டு அதைக்குறித்து மனஸ்தாபப்படு; என் குமாரன்மேல் விசுவாசம் வை; இனிமேல் அவர் வார்த்தைப்பிரகாரம் நட; இப்படிக்கு நீ சம்மதித்தால் என் குமாரன் செய்த வழி யாய் உன் கடன் தீரும்படி நான் உத்தரவு கொடுப்பேன்; நான் உன்னைத் தண்டியாமல் விடுவேனென்று சொன்னானே. அப்படிப் போல, தேவன் மனுஷர்களைப் பார்த்து: ஓ பாவிகளே! என் குமாரனாகிய இயேசுக்கிறி ஸ்து உங்களுக்காகச் செய்ததைப் பாருங்கள்;

உங்கள் பாவங்கள் நிவிர்த்தியாகிறதற்கு ஒரு வழியைப் பண்ணியிருக்கிறார்; நீங்கள் உங்கள் பாவங்களை அறிந்துகொண்டு அதுகளைக் குறித்து மனஸ்தாபப்பட்டு எல்லாப் பாவங்களையும் விட்டுவிடுங்கள்; என் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவை நம்பி விசுவாசித்துக் கொள்ளுங்கள்; அவர்மேல் அன்பு வைத்து இனிமேல் அவருடைய வார்த்தையின்படி நடவுங்கள்; இப்படிக்கு நீங்கள் உண்மையாய்ச் சம்மதித்தால் என் குமாரன் இயேசுக்கிறிஸ்து செய்த வழியாய் உங்கள் பாவங்கள் நிவிர்த்தியாகும்படி நான் உத்தரவு கொடுப்பேன்; உங்களை நரகத்திலே தள்ளித் தண்டிக்க மாட்டேன்; என் குமாரனாலே நீங்கள் மோட்சத்தையும் அடைவீர்களென்று சொல்லியிருக்கிறார்.

சகோதரரே! நீங்கள் தேவனுடைய கிருபையான வார்த்தையைக் கேட்டு நம்பி அதின்படி சம்மதித்துச் செய்யுங்கள். தேவனுடைய குமாரனாயிருக்கிற இயேசுக்கிறிஸ்து பூலோகத்துக்கு வந்து உங்களுக்காகப் பாடுபட்டுத் தம்முடைய உயிரைப் பலியாகக் கொடுத்து மறுபடி மூன்றாம் நாளிலே உயிரோடே எழுந்

தது நிசமான காரியம். அப்படியே அவர் பாவ நிவாரண மார்க்கத்தை உண்டாக்கினார். அவர் வந்து பாடுபட்டபடியினாலே, மனுஷர்களுடைய பாவங்கள் நிவிர்த்தியாகிறதற்கு ஒரு வழி அவராலே உண்டாயிருக்கிறது. வேறே ஒரு வழியும் இல்லை. அவர் பாடுபடாமல்போனால், பாவம் நிவிர்த்தியாகிறதற்கு ஒரு வழியும் இராது. அவர் பாடுபடாவிட்டால், நரகத்திலே விழாமல் தப்பி மோட்சலோகத்தைச் சேருகிறதற்கு ஒரு மார்க்கமும் இராது.

நீங்கள் இவ்வுலகத்தில் உயிரோடே இருக்கிறபோது உங்களுடைய பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டு எல்லாப் பாவங்களையும் விட்டுவிட்டு இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்து அவர் சொன்னபடி நடந்தால் அவராலே உங்களுடைய பாவங்கள் நிவிர்த்தியாகும். நீங்கள் சாகிறபோது உங்களுக்கு நரகம் வராது. அப்போது உங்களுக்கு மோட்சமே கிடைக்கும்.

நீங்கள் தேவனுடைய கிருபையான வார்த்தையை அசட்டைபண்ணினால், உங்களுக்கு நித்திய தண்டனை வரும். நீங்கள் இவ்வுலகத்தில் உயிரோடே இருக்கிறபோது உங்களு

டைய பாவங்களைக்குறித்து மனஸ்தாபப்படாமலும் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசியாமலும் போனால், உங்களுடைய பாவங்கள் ஒருபோதும் நிவிர்த்தியாகமாட்டாது. உங்களுக்கு மோட்சம் ஒருபோதும் கிடையாது. நீங்கள் சாகிறபோது உங்களுக்கு நரகமே கிடைக்கும்.

ஓ சகோதரரே! நீங்கள் இன்னமொரு நாள் மட்டுக்கும் பூமியில் உயிரோடே இருப்பீர்களோ இருக்கமாட்டீர்களோ அது தெரியாதே; ஆகையால் காலதாமசம் பண்ணாதேயுங்கள். நீங்கள் இப்போதே உங்கள் பாவங்களைக்குறித்து மனஸ்தாபப்பட்டுச் சகல பாவங்களையும் விட்டுவிடவேணும். நீங்கள் இப்போதே இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கவேணும்.

இந்த இரண்டு காரியங்களைக்குறித்துக் கொஞ்சம் விவரித்துச் சொல்லுகிறோம், கேளுங்கள்.

முதலாவது: நீங்கள் உங்களுடைய பாவங்களைக்குறித்து மனஸ்தாபப்பட்டு எல்லாப் பாவங்களையும் விட்டுவிடவேண்டும். தேவன் மிகவும் நல்லவர். அவர் பரிசுத்தர். அவர் தயவும் நீதியும் உள்ளவர். அவர் இட்ட கட்டளைகளெல்லாம் நியாயமான கட்டளைகள்.

அவருக்கு எல்லாரும் அடங்க வேண்டும். அவர்மேல் எல்லாரும் அன்பு வைத்து அவருடைய கட்டளையின்படி நடக்கவேண்டும். நீங்கள் அப்படிச் செய்யவில்லை. அவருக்கு நீங்கள் அடங்கிநடக்கவில்லை. அவர்மேல் நீங்கள் அன்பு வைக்கவில்லை. அவருடைய கட்டளைகளை நீங்கள் தள்ளிநடந்தீர்களே. இது மகா பாவம் அல்லவா? ஓ சகோதரரே! பரிசுத்தமும் கிருபையும் உள்ள தேவனுக்கு விரோதமாய் எப்போதும் பாவஞ்செய்தோமே, இது சரியல்லவே என்று நீங்கள் உங்கள் இருதயத்தில் துக்கப்படுங்கள். நீங்கள் செய்த பாவங்களைக்குறித்துக் கண்ணீர்விட்டு அழுது, இனிமேல் தேவனுக்குத் துரோகமாய் நடக்கமாட்டோமென்று தீர்மானஞ்செய்யுங்கள். இன்னும் பாருங்கள். நீங்கள் பிறந்த நாள்முதல் இதுவரைக்கும் தேவன் உங்களுக்கு அநேக உபகாரங்களைச்செய்துகொண்டுவருகிறார். உங்கள் தாயின் கர்ப்பத்தில் உங்களை உருவாக்கினவர் அவரே. இந்தமட்டுக்கும் உங்களைக் காப்பாற்றினவர் அவரே. உங்களுக்குப் புத்தியைக் கொடுத்தவர் அவரே. உங்களுடைய பாவங்கள் நிவிர்த்தியாகிறதற்கு ஒரு வழி

உண்டாகும்படி அவர் தம்முடைய குமாரனு
கிய இயேசுக்கிறிஸ்துவை இந்தப் பூலோகத்
துக்கு அனுப்பினுர். உங்களுக்கு உண்டாயி
ருக்கிற நன்மைகளையெல்லாம் அவர் உங்க
ளுக்குக் கிருபைசெய்தார். உங்களுக்கு அ
வர் எத்தனை தயவுகளைப் பண்ணினுர்! எத்
தனை உபகாரங்களைச் செய்தார்! அதுகளுக்
குக் கணக்குண்டா? கணக்கில்லையே. தே
வன் உங்களுக்குப் பரம தகப்பன் அல்ல
வா? நீங்கள் அதை யோசிக்காமல்போனீர்கள்.
நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து பிள்ளைக
ளாய் நடக்காமல் அவருடைய கட்டளைக
ளுக்கு விரோதமாய் நடந்தீர்கள். அவர் வே
ணுமென்ற காரியங்களை நீங்கள் செய்யாமல்
விட்டு, அவர் வேண்டாமென்ற காரியங்களைச்
செய்துவந்தீர்களே. ஓகோ இது கொடிய பா
வம் அல்லவா? ஓ சகோதரரே! நம்முடைய
பரம தகப்பனுக்கு விரோதமாய் எப்போதும்
பாவஞ்செய்தோமே, இது நியாயமல்லவே,
இது பெரிய துரோகம் என்று நீங்கள் உங்கள்
உள்ளத்தில் துக்கப்படுங்கள். இனிமேல் பாவ
மான வழிகளில் நடக்கமாட்டோமென்று நிச்
சயித்துக்கொள்ளுங்கள். நீங்கள் செய்த பா

வங்களைக்குறித்து இப்படி மனஸ்தாபப்பட்டு எல்லாப் பாவங்களையும் வெறுத்து விடுங்கள்.

இரண்டாவது: நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்ளவேண்டும். உங்களுடைய பாவங்களை நிவிர்த்திபண்ணுகிறதற்கு யாதொரு வழியும் உங்களிடத்திலே இல்லையென்று நன்றாய்க் கண்டறிந்துகொள்ளவேண்டும். உங்களுக்காக இயேசுக்கிறிஸ்து பாடுபட்டதினாலே, உங்களுடைய பாவங்கள் நிவிர்த்தியாகிறதற்கு ஒரு வழி அவராலே உண்டாயிருக்கிறதென்றும், வேறே ஒரு வழியும் இல்லையென்றும், பூர்த்தியாய் நம்பவேண்டும். நீங்கள் அவரையே உங்களுக்குக் குருவென்றும் உங்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிறவரென்றும் ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடே பற்றிக்கொண்டு, அவரை அன்போடே சேவித்துக்கொண்டு அவருடைய வார்த்தைப்பிரகாரம் நடக்கவேண்டும். இப்படி நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துமார்க்கத்திலே சேர்ந்து அதின்படி நடவுங்கள்.

ஓ சகோதரரே! உங்கள் ஆத்துமாக்கள் சுத்தமாகவேணுமே. ஆத்துமா சுத்தமாகாவிட்

டால், பரிசுத்தமான மோட்சலோகத்தில் எப்படிச் சேரலாம்? ஆத்துமசுத்தி உங்களுக்கு எப்படிக் கிடைக்கும்? நீங்களே உங்கள் ஆத்துமாக்களைச் சுத்திசெய்துகொள்ளுகிறதற்குக் கூடுமோ? கூடாதே. பரிசுத்தஆவியென்கிறவர்தான் ஆத்துமாவைச் சுத்திசெய்யவேணும். அவர் ஆரென்று கேட்கிறீர்களா? ஒரே தேவன், பிதா குமாரன் பரிசுத்தஆவி என்கிற மூவராயிருக்கிறாரென்று முன்சொன்னோமே; ஒரே தேவனாயிருக்கிற அந்த மூவரிலே பரிசுத்தஆவியென்கிறவர் ஒருவராயிருக்கிறார். யார் தங்கள் பாவங்களைக்குறித்து மனஸ்தாபப்பட்டு இயேசுக்கிறிஸ்துவை நம்பிக்கொள்ளுகிறார்களோ அவர்களைப் பரிசுத்தஆவியென்கிறவர் பரிசுத்தப்படுத்துகிறார். பிரியமானவர்களே! இயேசுக்கிறிஸ்துவை உண்மையாய் விசுவாசித்துக்கொள்ளுங்கள். அப்போது தேவன் உங்களுக்குத் தம்முடைய பரிசுத்தஆவியைக் கொடுப்பார். அந்தப் பரிசுத்தஆவி உங்கள் இருதயத்தில் வாசம்பண்ணுவார். உங்களைச் சத்தியத்திலே நடக்கச் செய்வார். இயேசுக்கிறிஸ்துவின் கிருபையைஉங்களுக்கு அதிகமதிகமாய் வெளிப்படுத்துவார். உங்க

ளுக்குள்ளே நிலையான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், தைரியத்தையும் உண்டாக்குவார். அவர் தினந்தினம் உங்கள் கெட்ட குணங்களை அதிகமதிகமாய் நீக்கி உங்கள் ஆத்துமாக்களை அதிகமதிகமாய்ச் சுத்திசெய்து கொண்டுவந்து நீங்கள் சாகிற காலத்தில் பூர்த்தியாய்ப் பரிசுத்தப்படுத்துவார்.

சகோதரரே! லோகரட்சகராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துநாதரை நல்ல மனசோடே நினைத்து, பாவங்களை விட்டு அவரை நம்பிக்கொள்ளுங்கள். அப்போது பிதா, குமாரன், பரிசுத்தஆவி, என்கிற மூவராயிருக்கிற ஒரே தேவன் உங்களுக்கு அருள் செய்வார். குமாரனென்கிறவர் உங்கள் பாவங்களை நிவிர்த்தி செய்வார். பிதாவென்கிறவர் உங்களைப் பிள்ளைகளாய் அங்கிகரித்துக்கொள்வார். பரிசுத்த ஆவியென்கிறவர் உங்கள் ஆத்துமாக்களைப் பரிசுத்தப்படுத்துவார்.

ஓ சகோதரரே! நாள்தோறும் தேவனைப் பிரார்த்தனைபண்ணுங்கள். தேவனை நினைத்துச் சொல்லுகிறதற்குத் தகுந்த விதமாக, இங்கே ஒரு பிரார்த்தனையைச் சொல்லிக்காண்பிக்கிறோம்.

# பிரார்த்தனை.

பரிசுத்தமுள்ள யெகோவாவே! நீர் வானத்தையும், பூமியையும், அதுகளில் உள்ள சமஸ்த வஸ்துகளையும் உண்டாக்கினீர். நீர் சகலத்தையும் காப்பாற்றிவருகிறீர். நீர் மாத்திரமே மெய்யான தேவன். நீர் மிகவும் மகிமையுள்ளவர். உம்மையே நான் பணிந்து வணங்குகிறேன்.

என் பரம பிதாவே! நீர் கிருபைக்கடலாயிருக்கிறீர். நான் பிறந்த நாள்முதல் இதுவரைக்கும் நீர் எனக்கு அநேக நன்மைகளைச் செய்தீர். நீர் எனக்குச் செய்துவருகிற எல்லா நன்மைகளுக்காகவும் நான் உம்மைத் துதிக்கிறேன். பாவத்தினாலே கெட்டுப்போன என்னை இரட்சிக்கும்படி நீர் உம்முடைய குமாரனாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை இரட்சகராகக் கொடுத்தீரே; இதுவே பெரிய உபகாரம். இதுக்காக நான் உம்மை இப்போதும் எப்போதும் ஸ்தோத்திரஞ்செய்கிறேன்.

கிருபையுள்ள கடவுளே! நீர் நல்லவர். நீர் பாவமில்லாதவர். நீர் மகா பரிசுத்தர். நானே பாவி. உமக்கு அடங்காமல் உம்முடைய நல்ல கட்டளைகளை நான் தள்ளி, உமக்கு விரோதமாய் நடந்து வெகு பாவங்களைச் செய்திருக்கிறேன். இத்தனையென்று கணக்கில்லையே. உமக்குத் தூரமாய்த் திரிந்து பாவமான வழிகளில் அலைந்தேன். என்னிடத்தில் நல்ல குணமும் இல்லை. நல்ல நடத்தையும் இல்லை. என் இருதயம் பாவத்தினாலே அழுக்குப்பட்டிருக்கிறது. என் நடத்தைகளெல்லாம் பாவ சம்பந்தமாயிருக்கிறது. அன்புள்ளவரே! நான் இப்படி உமக்கு விரோதமாய் நடந்து பாவஞ் செய்தது எனக்கு மிகவும் மனஸ்தாபமாயிருக்கிறது. என் பாவங்களைக்குறித்து நான் துக்கப்படுகிறேன். இனிமேல் பாவவழிகளில் நடக்கிறதற்கு எனக்கு மனம் இல்லை.

வல்லமையுள்ள கர்த்தரே! பாவஞ்செய்த நான் உம்முடைய கோபத்துக்கும் நித்திய தண்டனைக்கும் பாத்திரனேயல்லாமல், உம்முடைய தயவுக்கும் நித்திய சுகத்துக்கும் எவ்வளவும் பாத்திரனல்லவே. நீர் என் பாவங்களைப் பார்த்து என்னை நரகத்தில் விழும்படி தள்

ளிவிட்டால், அது நியாயமாயிருக்கும். அப்படியிருந்தும், என்னுடைய பாவங்கள் நிவிர்த்தியாகவும், நான் நரகத்தில் விழாமல் தப்பி மோட்சகதி சேரவும், ஒரு வழி உண்டாகும்படி நீர் இயேசுக்கிறிஸ்துவை இந்தப் பூலோகத்துக்கு அனுப்பினீர். என் பாவங்களுக்காக அவர் வந்து பாடுபட்டாரே; என் பாவங்களுக்காக அவர் தம்முடைய இரத்தத்தை இந்தப் பூமியிலே சிந்தித் தம்முடைய சீவனையும் விட்டாரே; பாவிகளுக்காகத் தம்முடைய உயிரைக் கொடுத்து மறுபடியும் உயிரோடே எழுந்து, இப்போது உம்முடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிற அந்த இயேசுக்கிறிஸ்துவின் முகத்தை நீர் பார்த்து, அவர் பட்ட பாடுகளினிமித்தம் என் பாவங்களையெல்லாம் மன்னித்து என்னை நரகத்தில் விழாதபடி இரட்சியும். அவருடைய இரத்தத்தினாலே என் இருதயத்தைக் கழுவும். அவர் நிமித்தம் என்னை உம்முடைய பிள்ளையாய் ஏற்றுக் கொள்ளும்.

தயவுள்ள தேவனே! நான் இனிமேல் நீர் சொன்னபடியே பரிசுத்தமாய் நடக்கவேணுமென்று ஆசையாயிருக்கிறேன். ஆனாலும்,

என் குணம் பாவகுணமே. பரிசுத்தமாய் நடக்கிறதற்கு எனக்குத் திராணி இல்லை. என் குணமும் நடத்தையும் பரிசுத்தமாகும்படி பரிசுத்தஆவியின் அருள் வேணுமே. இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் உம்முடைய பரிசுத்த ஆவியை எனக்குக் கொடும். பரிசுத்தஆவி என் இருதயத்தில் வந்து தங்கி என் கெட்ட குணங்களை நீக்கி எனக்கு நல்ல குணங்களைத் தந்து என் ஆத்துமாவைச் சுத்திசெய்து என்னைப் பரிசுத்தமாய் நடக்கப்பண்ணும்படி அந்தப் பரிசுத்தஆவியை எனக்கு அனுக்கிரகஞ் செய்யும்.

என் ஆண்டவரே! எனக்கு வேண்டிய மற்றெல்லா உபகாரங்களையும் இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் எனக்கு அருளிச்செய்யும். நான் பூமியிலே உயிரோடிருக்கும் நாளெல்லாம் என்னை உம்முடைய பரிசுத்த மார்க்கத்தில் சரியாய் நடக்கப்பண்ணி, நான் சாகும் நாளிலே என்னை உம்மோடே எப்போதும் இருக்கிறதற்கு மோட்சலோகத்தில் சேர்த்துக்கொள்ளும். கர்த்தாவே! நான் எனக்கு வேணுமென்று கேட்டுக்கொண்ட நன்மைகளையெல்லாம் நீர் எனக்குமாத்திரமல்ல, என்னைச் சேர்

ந்த யாவருக்குங்கூடத் தயவுசெய்யும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

அருள் நிறைந்த பிதாவே! பூலோகத்தில் இருக்கிற எல்லா மனுஷர்களுக்கும் உம்முடைய தயவை வெளிப்படுத்தும். யார் பொய்யான சாஸ்திரங்களையும் பொய்யான மதங்களையும் அனுசரிக்கிறார்களோ அவர்கள் அந்தப் பொய்ச்சாஸ்திரங்களையும் பொய்மதங்களையும் தள்ளிவிடும்படியாகக் கடாட்சியும். பூமியில் உள்ள சர்வதேசத்தாரும் உம்முடைய சத்தியவேதத்தை அறிந்து நம்பி, பாவ நடத்தைகளை விட்டு, நீர் அனுப்பின இரட்சகரை விசுவாசித்து, நீர் கொடுத்த பரிசுத்த கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்து உம்மைச் சேவித்து நடக்கும்படியாகக் கிருபைசெய்யும்.

திரியேக தேவனே! நான் என்னையும், எனக்கு உண்டாயிருக்கிற எல்லாவற்றையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். பிதாவே! என்னை உம்முடைய பிள்ளையென்று எடுத்துக்கொள்ளும். குமாரனென்கிற இயேசுக்கிறிஸ்துவே! என் பாவத்தை நிவிர்த்திசெய்யும். பரிசுத்த ஆவியே! என்னைச் சுத்திபண்ணும். பிதா, குமாரன், பரிசுத்தஆவி, என்கிற மூவராயிருக்

கிற ஒரே தேவனே! உமக்கே சர்வகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது.

என் பரம தகப்பனே! நான் இந்தப் பிரார்த்தனையை இயேசுக்கிறிஸ்துவின் பேரைச் சொல்லிப் பண்ணுகிறேன். நான் கேட்டுக்கொள்ளுகிறதெல்லாம் அவர்நிமித்தமாகவே கேட்டுக்கொள்ளுகிறேன். ஆமென்.

ஆறும் அதிகாரம் முற்றிற்று.

## ஏழாம் அதிகாரம்.

### நியாயத்தீர்ப்புநாளைக் குறித்துச் சொல்லியது.

மனுஷர்கள் பூலோகத்திலே செய்த காரியங்களைக்குறித்துத் தேவன் விசாரணைபண்ணி, அவனவன் செய்ததற்குத் தக்கபடியே அவனவனுக்கு நியாயமான தீர்ப்புக் கொடுக்க வேண்டியது. அப்படி விசாரணைசெய்து தீர்ப்புக் கொடுக்கும்படி தேவன் இனிமேல் வரப் போகிற ஒரு காலத்தை நியமித்திருக்கிறார். அந்தக் காலத்துக்கு நியாயத்தீர்ப்புநாள் என்றும், கடைசிநாள் என்றும் பேர். அது இந்தப் பூலோகத்தின் முடிவில் வரும்.

அது மகா பயங்கரமான நாளாயிருக்கும். அந்த நாளிலே வானங்கள் ஒழிந்துபோம். பூதங்கள் எரிந்து, கரிந்து, கரைந்துபோம். பூமண்டலமும் வெந்துபோம்.

அந்த நாளிலே இயேசுக்கிறிஸ்துநாதர் சொல்லிமுடியாத மகிமையோடும் கணக்கில்லாத

தம்முடைய தேவதூதர்களோடும் மோட்ச லோகத்திலிருந்து மேகங்களின்மேல் வருவார். சமஸ்த மனுஷர்களுக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர் இந்தப் பூமியைச் சேர்ந்த ஆகாசத்திலே இறங்கிவருவார். சர்வ நியாயாதிபதியாய் அவர் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அந்த நாளிலே, அவர், பூலோகம் உண்டானதுமுதற்கொண்டு பூலோகத்திலே செத்துப்போன எல்லாருடைய தேகங்களும் உயிரடைந்து எழுந்துவரும்படி செய்வார். எவருடைய தேகமும் தப்பாது. சுடுகாட்டிலே வெந்து சாம்பலாய்ப்போன தேகமும், கடலிலே அமிழ்ந்து அழுகிப்போன தேகமும், மண்ணிலே புதைக்கப்பட்டு மக்கிப்போன தேகமும், அந்த நாளிலே மறுபடியும் பூலோகத்தில் உயிரடைந்து எழுந்துவரும்.

பிரியமானவர்களே! மனுஷர்கள் ஒரே தரம் பிறந்து ஒரே தரம் சாகிறார்களேயொழிய வேறு சென்மத்திலே புகுந்து வேறு தேகத்தை எடுக்கிறதில்லையென்றும்; பூமியிலே மனுஷர்களுடைய தேகம் சாகிறபோது அவர்களுடைய ஆத்துமா தேகத்தை விட்டு, பூலோகத்தைத் தாண்டிப் போய் மோட்சத்திலேயா

வது நரகத்திலேயாவது சேருகிறதென்றும்; முன்னே சொன்னோமே: நியாயத்தீர்ப்புநாளிலே நடக்கப் போகிற காரியத்தையும் இப்போது சொல்லுகிறோம்: நன்றாய்த் தெரிந்துகொள்ளுங்கள். இந்தப் பூலோகத்திலே எவன் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கிறானோ, அவனுடைய தேகம் சாகிறபோது அவனுடைய ஆத்துமா மோட்சலோகத்திலே சேர்ந்து, நியாயத்தீர்ப்புநாள்வரைக்கும் அங்கே சுகத்தோடே வாழ்ந்துகொண்டிருந்து, அந்த நியாயத்தீர்ப்புநாளிலே இயேசுக்கிறிஸ்துநாதருடன் புறப்பட்டு வந்து, அவராலே எழுப்பப்பட்ட தன் தேகத்தோடே கூட்டப்படும். இந்தப் பூலோகத்திலே எவன் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசியாமல்போகிறானோ, அவனுடைய தேகம் சாகிறபோது அவனுடைய ஆத்துமா நரகலோகத்திலே விழுந்து, நியாயத்தீர்ப்புநாள்வரைக்கும் அங்கே வேதனையோடே அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்து, அந்த நியாயத்தீர்ப்புநாளிலே இயேசுக்கிறிஸ்துநாதருடைய கட்டளையினாலே புறப்பட்டு வந்து, அவராலே எழுப்பப்பட்ட தன் தேகத்தோடே கூட்டப்படும். இப்படியே இயேசுக்

கிறிஸ்துநாதர், இறந்துபோன சமஸ்த மனுஷ
தேகங்களையும் அந்தக் கடைசிநாளிலே எழுப்
புவார். பூமி சிருஷ்டிக்கப்பட்டதுமுதல் செ
த்த எல்லா மனுஷர்களும் அந்த நாளிலே உயி
ரோடே எழுந்து நிற்பார்கள். அப்போது
இயேசுக்கிறிஸ்துநாதர் சிங்காசனத்தின்மேல்
மகிமையோடே வீற்றிருக்க, சகல மனுஷர்
களும் அவருக்கு முன்பாக நிறுத்தப்படு
வார்கள். அப்போது அவர் அவர்களை இர
ண்டு பிரிவாகப் பிரிப்பார். முன்னே பூலோ
கத்தில் உயிரோடே இருந்த காலத்திலே எ
வர்கள் இயேசுக்கிறிஸ்துவை உண்மையாய்
விசுவாசித்துக்கொண்டார்களோ, அவர்களை
அந்த இயேசுக்கிறிஸ்து அந்தக் கடைசிநாளி
லே தம்முடைய வலது பக்கத்திலே கூட்டு
வார். முன்னே பூலோகத்தில் உயிரோடே
இருந்த காலத்திலே எவர்கள் இயேசுக்கிறிஸ்
துவை உண்மையாய் விசுவாசியாமல்போனர்
களோ, அவர்களை அந்த இயேசுக்கிறிஸ்து
அந்தக் கடைசிநாளிலே தம்முடைய இடது
பக்கத்திலே கூட்டுவார். பின்பு அவர் தீர்ப்
புச் சொல்லுவார். தீர்ப்புச் சொல்லியான
பின்பு, அவருடைய இடது பக்கத்திலே நிற்

கிறவர்கள் தேகத்தோடேகூடவே மறுபடியும் நரகத்திலே தள்ளப்படுவார்கள். அவர்கள் அங்கேயிருந்து ஒருபோதும் தப்பமாட்டார்கள். பிசாசுகளோடேகூட அவர்கள் அங்கேயே என்றென்றைக்கும் இருப்பார்கள். பயங்கரமான வேதனைகளை அந்த நரகத்திலேதானே எப்போதும் அனுபவித்துக்கொண்டிருப்பார்கள். இயேசுக்கிறிஸ்துவின் வலது பக்கத்திலே நிற்கிறவர்கள் தேகத்தோடேகூடவே மறுபடியும் மோட்சலோகத்துக்கு இயேசுக்கிறிஸ்துவுடன் ஏறிப்போவார்கள். அவர்கள் அதை ஒருபோதும் விட்டுப் பிரியமாட்டார்கள். அவர்கள் அங்கேயே என்றென்றைக்கும் இருப்பார்கள். பரம சவுக்கியத்தை அந்த மோட்சலோகத்திலேதானே எப்போதும் அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

பூலோகத்தில் உள்ளவர்களே! இப்போதுதானே உங்கள் பாவங்களைக்குறித்து மனஸ்தாபப்படுங்கள். எல்லாப் பாவங்களையும் விட்டுவிடுங்கள். லோகரட்சகராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்ளுங்கள். அவருடைய திவ்விய மார்க்கத்திலே சேர்ந்து, நீங்கள் சாகும்பரியந்தம் அதின்படியே நட

வுங்கள். இதுவே உங்களுக்குச் சமயம். இப்போது நீங்கள் அப்படிச் செய்வீர்களேயானால், நியாயத்தீர்ப்பு நாளிலே இயேசுக்கிறிஸ்துவின் வலதுபக்கத்திலே சேர்ந்து, மோட்சத்துக்கு உரியவர்களென்று அங்கீகரிக்கப்படுவீர்கள். நீங்கள் இந்தப் பூலோகத்திலே உங்கள் பாவங்களை விட்டுவிடாமலும் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசியாமலும்போனால், நியாயத்தீர்ப்புநாளிலே அவருடைய இடதுபக்கத்திலே சேர்ந்து, நரகத்துக்கு உரியவர்களென்று தள்ளப்படுவீர்கள்.

இந்தப் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிற காரியங்களை நம்பி அதுகளின்படி நடக்கிறதற்கான இருதயத்தைத் திரியேக தேவனாயிருக்கிற யெகோவா உங்களுக்கு அனுக்கிரகம்பண்ணக்கடவர். அவருக்கே அனந்த ஸ்தோத்திரம் உண்டாவதாக.

ஏழாம் அதிகாரம் முற்றிற்று.